Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 தை 21 ஞாயிற்றுக்கிழமை (03-02-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:70


## போர் நிறுத்த காலத்தில் செஞ். குழுவின் உதவி

### அரசும் - புலிகளும் விருப்பம்

கொழும்பு,பெப்.3

போர்நிறுத்தக் காலத்தில் ஏற்படக்கூடிய மனிதாபிமானப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவுமாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவிடம் அரசும், விடுதலைப் புலிகளும் எழுத்துமூலம் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பேச்சாளர் அர்ஜுன ரணவன இத்தகவலை வெளியிட்டார்.

மட்டக்களப்பு, அம்பாறை, பொலநறுவை மாவட்டங்களில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நடவடிக்கைகள் பற்றி விளக்குவதற்காக மட்டக்களப்பில் உள்ள செஞ்சிலுவை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் செய்தியாளர் மாநாடு நடைபெற்றது.

அங்கு வைத்தே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

சமாதானப் பேச்சுக்கு செஞ்சிலுவைக் குழுவின் பங்களிப்பு கோரப்பட்டிருக்கிறதா என கேட்டபோது-நடுநிலையாளர்கள் என்ற ரீதியில் யுத்தநிறுத்தக் காலத்தில் ஏற்படக்கூடிய மனிதாபிமானப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு உதவி செய்யுமாறு கடந்த சில தினங்களுக்கு முன்னர் அரசாங்கமும் விடு

(10ஆம் பக்கம் பார்க்க)

## நீர்கொழும்புச் சிறைக் கைதிகள் சாகும் வரை உண்ணாவிரதம்!

### பிணையில் விடுவிக்கக் கோரி

கொழும்பு,பெப்.3

குடிவரவு, குடியகல்வுச் சட்டத்தின் கீழ் நீர்கொழும்புச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் சுமார் 550 பேர் தங்களைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி சாகும் வரையான உண்ணாவிரதப் போரை ஆரம்பித்திருக்கின்றனர்.

அங்குள்ள 20 பெண் கைதிகள் நேற்றுமுன்தினம் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர். அவர்களைத் தொடர்ந்து ஆண் கைதிகள் அனைவரும் நேற்று உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருக்கின்றனர்.

தங்களைப் பிணையில் விடுவிக்குமாறு கோருவதற்காக நீதி அமைச்சரைச் சந்திக்க வசதி செய்யப்படவேண்டும் என்று இக்கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிணையில் விடுவிக்கப்படாமல் நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இவர்கள் தங்களுக்குப் பிணை வழங்கக் கோரி முன்னர் பல தடவைகள் போராட்டங்களை நடத்தியிருந்தனர்.

அண்மையில் நீர்கொழும்புப் பகுதியில் இருந்து இத்தாலிக்குப் புறப்பட்ட சமயம் கடற்கரையில் கைது செய்யப்பட்ட சுமார் 300 பேர் உட்பட 550 கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கின்றனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். சிறைச்சாலையில்

## உண்ணாவிரதக் கைதி நேற்றிரவு மயக்கம்!

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ். சிறைச்சாலையில் நேற்றுமுன்தினம்முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த கைதிகளில் ஒருவர் நேற்று இரவு மயக்கமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

கடந்த மாதம் அச்சுவேலிப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் கனகன் (முருகானந்தன் (வரணி) என்ற இளைஞனே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவர் இரத்த வாந்தி எடுத்ததாகவும் அதனைத் தொடர்ந்து மயக்கமடைந்ததாகவும் கூறப்படுகின்றது.

அச்சுவேலிப் பகுதியில் கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்களில ஒருவரான இவரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் காங்கேசன்துறை குற்றத்தடுப்புப் பொலீஸார் ஆஜர் செய்தபோது நீதிவான் இவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

(மற்றொரு செய்தி 2ஆம் பக்கத்தில்) (ஐ-6)

## மட்டக்களப்பு, அம்பாறையில் இன்று சமாதானப் பேரணிகள்

மட்டக்களப்பு,பெப்.3

அரசு நிரந்தர யுத்தநிறுத்தத்தைப் பிரகடனம் செய்து விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்கவேண்டுமெனக் கோரி மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் இன்று சமாதானப் பேரணிகள் நடைபெறவுள்ளன.

அம்பாறையில் இரண்டு அணிகளாகவும், மட்டக்களப்பில் மூன்று அணிகளாகவும் நடத்தப்படவுள்ள இந்தப் பேரணிகளை மட்டு - அம்பாறை மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் பெரிய நீலாவணையில் இருந்து காரைதீவு வரை ஓர் அணியும் -

காரைதீவில் இருந்து அக்கரைப்பற்றுவரை மற்றோர் அணியும் பேரணியில் ஈடுபடும்.

தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பைச் சேர்ந்த திகாமடுல்ல மாவட்ட எம்.பி. சந்திரநேரு இந்தப் பேரணிகளுக்குத் தலைமை வகிப்பார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வந்தாறுமூலையில் இருந்து காந்தி சதுக்கம் வரை ஒரு பேரணி இடம்பெறும்.

வாழைச்சேனையில் இருந்தும், களுவாஞ்சிக்குடியில் இருந்தும் காந்தி சதுக்கம் வரை மற்றும் இரு பேரணிகள் நடைபெறும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரதின நிகழ்ச்சியை நாளை செயலகத்தில் நடத்தமுடியாத நிலை!

யாழ்ப்பாணம்,பெப்.3

இலங்கையின் 54ஆவது சுதந்திர தினமான நாளை யாழ். மாவட்ட செயலகத்தில் தேசியக்கொடியேற்றல் உட்பட சுதந்திரதின வைபவத்தை நடத்தமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

யாழ். செயலகத்தை இயங்கவிடாமல் தடுத்து மீனவர்கள் நடத்திவரும் மறியற்போராட்டம் காரணமாக செயலகம் இயங்குவது தடைப்பட்டிருக்கின்றது.

தமது கோரிக்கைகளுக்கு உரிய பதில் நடவடிக்கைகளை அரசு எடுக்காதவரை தொடர்ந்து மறியற்போராட்டத்தை முன்னெடுக்கப்போவதாகத் தெரிவித்துள்ள கடற்றொழிலாளர்கள் சுதந்திரதினமான நாளை செயலகத்தில் தேசியக்கொடியை ஏற்ற அனுமதிக்கப்போவதில்லை என்று சூளுரைத்திருக்கின்றனர்.

இந்நிலையில் -

நாளை சுதந்திரதின வைபவம் பெரும்பாலும் செயலகத்தில் நடைபெறமாட்டாது என்று செயலக வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த நான்கு தினங்களாக யாழ். செயலகத்தின் முன்பாக மறியற்போராட்டத்தில் ஈடுபட்டு வந்த கடற்றொழிலாளர் சமூகத்தினர் இன்று ஞாயிற்றுக்கிழமை தமது போராட்டம் குறித்து சாதகமான பதில் கிடைக்கப்பெறவேண்டும் என்றும் -

இல்லையேல் நாளை திங்கட்கிழமை தொடர்ந்தும் மறியற்போராட்

(10ஆம் பக்கம் பார்க்க)

# பிரதமர் ரணில் விரைவில் அமெரிக்காவுக்கு செல்வார்!

## சமாதானப் பேச்சு, தடைநீக்கம் இவை குறித்து அங்கு விளக்குவார்

கொழும்பு,பெப்ரவரி3

**விடுதலைப் புலிகளோடு நேரடிப் பேச்சுகள் ஆரம்பமாவதற்கு முன்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவும் அமெரிக்காவுக்கு விஜயம் செய்வர்.**

**நோர்வேயின் அனுசரணையுடன் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிக்க எடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் பற்றியும் சர்வதேச நிலைப்பாட்டைப் பாதிக்காதவாறு விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்க விவகாரத்தைக் கையாளுதல் குறித்தும் பிரதமர் அமெரிக்கத் தலைவர்களுக்கு விளக்குவார்.**

கொழும்பில் பிரதமர் அலுவலக வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றன.

பிரதமரின் விஜயத்துக்கான திகதி இன்னமும் குறிக்கப்படவில்லை. அது விரைவில் இடம்பெறும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமராகப் பதவியேற்ற பின்னர் ரணில் விக்கிரமசிங்க புதுடில்லிக்குச் சென்று இந்தியத் தலைவர்களுடன் பேச்சு நடத்தியிருந்தார். தற்போது அவர் அமெரிக்காவுக்குச் செல்லவுள்ளார்.

அமெரிக்காவினால் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புடன் நேரடிப் பேச்சு நடத்துவதற்கு முன் அமெரிக்கத் தலைவர்களுடன் பேசி அமெரிக்காவின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்திக்கொள்ளவே ரணில் அங்கு செல்லவிருப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

சீரழிந்துபோயுள்ள நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப அமெரிக்க முதலீடுகளை ஊக்குவிப்பது பிரதமரது அமெரிக்க விஜயத்தின் மற்றொரு நோக்கம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைத்தொழில் விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொட பிரதமர் ரணிலின் செய்தியுடன் ஏற்கனவே வாஷிங்ரன் சென்றிருக்கிறார். அவர் அங்கு சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகள் குழுவுடன் சாதகமான பேச்சுகளை நடத்தியிருப்பதாக அரசு சார்பு இணையத்தளம் ஒன்று தெரிவித்துள்ளது. (ஐ-7)

## எதிர்க்கட்சித் தலைவராக மகிந்த ராஜபக்ஷ தெரிவு

கொழும்பு,பெப்.3

புதிய எதிர்க்கட்சித் தலைவராக மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் உப தலைவருமான மகிந்த ராஜபக்ஷ பொ.ஐ.மு. அரசாங்கத்தில் நீரியல்வள மீன்பிடித்துறை அமைச்சராகவும் பின்னர் துறைமுகங்கள் அபிவிருத்தி அமைச்சராகவும் கடமையாற்றியவர். இவரது நியமனத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா வழங்கியுள்ளார்.

எதிர்க்கட்சி தலைவராக இருந்த ரத்னசிறி விக்கிரமநாயக்க சிகிச்சைக்காக பாங்கொக் சென்றிருந்தார். அங்கிருந்து தனது ராஜினாமாக் கடிதத்தை அவர் சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவிற்கு அனுப்பியிருந்தார். இதனால் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவரை நியமிக்குமாறு கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தியிருந்தனர். எனினும் ரத்னசிறி விக்கிரமநாயக்கவின் பூரண சம்மதம் கிடைக்கும் வரை புதிய தலைவர் தெரிவுசெய்யப்படவில்லை.

ரத்னசிறி விக்கிரமநாயக்க வெளிநாடு சென்றமையால் ரிச்சாட் பத்திரான பதில் எதிர்க்கட்சி தலைவராக நியமனம் பெற்றிருந்தார்.

இதேவேளை -

மகிந்த ராஜபக்ஷ புதிய எதிர்க்கட்சித் தலைவராக தெரிவு செய்யப்பட்டமை தமக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என சபாநாயகர் தெரிவித்துள்ளார். (ஐ)

### கப்பல் பயணிகளுக்கு அழைப்பு!

யாழ்ப்பாணம்,பெப்.3

காங்கேசன்துறையில் இருந்து 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் இன்று திருகோணமலை நோக்கிப் புறப்படும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

கப்பலில் செல்லப் பயணச்சீட்டுப் பெற்றவர்களை இன்று காலை யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் சமுகம் அளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3)

### ஜெயலலிதாவுக்கு பகிரங்கக் கடிதம்

வாஷிங்டன்,பெப்.3

விடுதலைப் புலிகளுக்கும் அரசுத் தரப்புக்கும் இடையிலான சமாதானப் பேச்சுகளை தென்னிந்தியாவில் நடத்த அ.தி.மு.க. அனுமதிக்கவேண்டும்.

அமெரிக்காவில் வசிக்கும் ஈழத்தமிழர் ஒருவர் செல்வி ஜெயலலிதா ஜெயராமுக்கு அனுப்பியுள்ள பகிரங்கக் கடிதம் ஒன்றில் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் தோல்வியடைய அனுமதிக்க வேண்டாம். அவர்களது உயிர்கள் பாதுகாக்கப்படவேண்டும் என்பது

(10ஆம் பக்கம் பார்க்க)

### 2,500 கைதிகள் விடுதலை!

கொழும்பு,பெப்.3

சிறு குற்றங்களுக்காகச் சிறைத் தண்டனை அனுபவித்துவரும் 2ஆயிரத்து 500 கைதிகள் சுதந்திர தினத்தை ஒட்டி ஜனாதிபதி விடுதலை செய்துள்ளார்.

இந்தக் கைதிகளை விடுதலை செய்யுமாறு சிறைச்சாலை ஆணையாளருக்கு ஜனாதிபதி உத்தரவிட்டிருக்கிறார். விடுவிக்கப்படவுள்ள கைதிகளில் தமிழர்கள் எவரும் இல்லை - என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-6-9)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்




யாழ்.செயலகம் முன்பாக கடந்த நான்கு தினங்களாக மறியற் போரில் ஈடுபட்டுவரும் கடற்றொழிலாளர்களுடன் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் நேற்றுக் கலந்துரையாடியபோது எடுக்கப்பட்ட படங்கள். காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் சிவாஜிலிங்கம் 'ஸ்ரெச்சரில்' காணப்படுகின்றார்.

(படங்கள் : பொ. இராஜேஸ்வரன்)

## துலா முறிந்து யுவதி படுகாயம்!

யாழ்ப்பாணம்,பெப்.3

கடந்த மூன்று தினங்களாகப் பெய்த அடைமழையில் நனைந்து இளகிப்போயிருந்த துலாமூலம் கிணற்றில் நீர் அள்ளமுற்பட்ட யுவதி ஒருவர் மீது துலாமரம் முறிந்து விழுந்ததில் அவர் படுகாயமடைந்தார்.

திருநெல்வேலிப் பகுதியைச் சேர்ந்த குழந்தைவேல் சசி(வயது 23) என்ற யுவதியே நேற்று மாலை மயக்கமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-6)

## கிணற்றில் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம்,பெப்.3

மனநிலை பாதிக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் ஒருவரின் சடலம் நேற்று மாலை மானிப்பாய்ப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

மானிப்பாய், சோதிவேம்படி லேன பகுதியைச் சேர்ந்த செல்வநாயகம் சச்சிதானந்தம் (வயது 56) என்பவரது சடலமே கிணற்றில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

இவரது சடலம் மரண விசாரணைகள் மற்றும் பிரேத பரிசோதனைகளின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

# யாழ்.சிறையில் கைதிகள் நேற்றும் உண்ணாவிரதம்

## சென்று பார்க்க உறவினருக்கு அனுமதி இல்லை

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ்.சிறைச்சாலையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளால் நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்ட உண்ணாவிரதம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

சிறைச்சாலையிலுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 22 கைதிகளில் 17 கைதிகளே உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த உண்ணாவிரதம் பற்றி சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துக்கு தாம் தெரியப்படுத்தியுள்ளதாக சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை - உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடும் கைதிகளைப் பார்வையிடுவதற்கு நேற்று சிறைக்கு வந்த பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் கைதிகளைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. இதனால் அவர்கள் சிறைக்கு வெளியே கண்ணீருடன் நின்றதைக் காணக்கூடியதாக இருந்தது. (ஜ-10-180)

# சமாதானத்தை உருவாக்க மக்கள் தந்த ஆணையை பிரதமர் நிறைவேற்றவேண்டும்

## இறையியல் கல்லூரிகளின் ஒன்றியம் மகஜர்

யாழ்ப்பாணம்,பெப்.3

சமாதானத்துக்கான மக்களின் ஏகோபித்த ஆணையை நடைமுறைப் படுத்தும் தார்மீகக் கடமையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்றவேண்டும்.

- இவ்வாறு கிறிஸ்தவ இறையியல் கல்லூரிகளின் ஒன்றியம், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பிவைத்துள்ள மகஜரில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கக்கோரி - புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, கிறிஸ்தவ இறையியல் கல்லூரி ஆகியன இணைந்து அனுப்பிவைத்துள்ள அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பல ஆண்டுகளாக நம் நாட்டில் நடந்துவரும் யுத்தத்தால் துவண்டு போயிருக்கும் சாதாரண பொதுமக்களின் குரலாக, எந்தவொரு அரசியல் கட்சியையும் சாராது நாம் எழுதுவது - உங்கள் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு சமாதானம், பேச்சுவார்த்தை, சம உரிமை என்ற பிரசாரத்தினால் நடத்துமுடிந்த பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றது. இதன் மூலம் நாட்டில் சமாதானத்தை நிலைநாட்ட தமிழ்பேசும் மக்களும் சிங்களம் பேசும் மக்களும் தமது ஏகோபித்த, தீர்க்கமான ஆணையை உங்கள் அரசுக்குத் தந்துள்ளனர். எனவே, உங்கள் வாக்குறுதியை நடைமுறையாக்குவது உங்கள் அரசியல் கடமையும் தார்மீகக் கடமையுமாகும்.

நீங்களும் உங்கள் அரசாங்கமும் இதுவரை காலமும் மேற்கொண்ட சமாதானத்தை நோக்கிய முன்னெடுப்புகள் வரவேற்கத்தக்கவை; பாராட்டுதற்குரியவை. புலிகளின் 'யுத்த நிறுத்தமும்' உங்கள் 'மோதல் தவிர்ப்பும்' ஒருமாத கால நகர்வை முடித்து இரண்டாவது மாதத்துக்கும் நகர்ந்து செல்கின்றன. சமாதானப் பேச்சை சுமுகமாக முன்னெடுக்க 'புலிகளின் மீதான தடை நீக்குதல்' இன்றைய உடனடித் தேவையாகும். இதனை தாங்கள் நன்கு உணர்வீர்கள்.

'தேவை ஏற்படின் புலிகளுக்கு எதிரான தடை நீக்கப்படும்' என்று நீங்கள் தேர்தல் பிரசார காலத்தில் குறிப்பிட்டதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். அத்தேவையே இப்போது எழுந்துள்ளது. உங்கள் இந்த முயற்சிக்கு எதிராக எழும் சக்திகளின் எதிர்ப்புக்களின் மத்தியிலும் நாட்டின் நலனில் அக்கறை கொண்டு இந்த வரலாற்றுக் கடமையை நீதியுடன் மேற்கொள்வீர்கள் என நம்புகிறோம்.

கடந்த கால யுத்தத்தின் வடுக்களைத் தாங்கி, அதன் அவலம் போதும் என, சமாதான விடியலை நோக்கியிருக்கின்றோம். தற்காலிக போர் ஓய்வு நிரந்தரமாகி, மக்கள் அனைவரும் சம உரிமையோடு வாழும் நாளுக்காக காத்திருக்கின்றோம். போரினால் சமாதானம் கிட்டப்போவதில்லை, இது வரலாற்று உண்மை. இருதரப்பினதும் மனம் திறந்த, நீதியுடனான பேச்சுவார்த்தையின் முடிவுகளே நம் நாட்டுக்கு சமாதானத்தைக் கொண்டுவரும். இந்த பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதற்கு முட்டுக்கட்டையாகவுள்ள 'புலிகள் மீதான தடையை' நீக்குதல் காலத்தின் கட்டாயமாகும். இத்தடையை அகற்றுதல் சமாதானத்துக்கான முதல் தடைக்கல் அகற்றலாகும்.

சமாதானத்தை ஏற்படுத்த தாங்கள் எடுக்கும் முயற்சிகள் வெற்றிபெற இறைஉதவியை வேண்டுவதோடு, மீண்டும் எமது நாட்டுக்கு அமைதி கிடைக்கும் என்பதில் தளராத நம்பிக்கையுடன் இருக்கின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

# டிசெம்பருக்குள் ஜனாதிபதி வீட்டுக்கு அனுப்பப்படுவார்

## சூளுரைக்கிறார் திஸநாயக்கா

கொழும்பு,பெப்.3

நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு முன்னர் ஜனாதிபதி வீட்டுக்கு அனுப்பப்படுவார்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா.

கண்டி ஹங்குராங்கெத்த பகுதியில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் மேலும் கூறியதாவது-

ஐக்கிய தேசிய முன்னணி அரசு மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகளைத் தடுத்து நிறுத்தி அதன் மூலம் அரசியல் ஸ்திரமின்மையை உருவாக்க ஜனாதிபதி முயன்று வருகின்றார்.

இந்த அரசியல் ஸ்திரமின்மை மூலம் நாடாளுமன்றத்தைக் கலைப்பது ஜனாதிபதியின் நோக்கம். ஆனால் அரசமைப்புக்கு அமைய அவரால் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6ஆம திகதி நாடாளுமன்றத்தின் ஒரு வருடப் பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னர் அவர் எப்படியாவது வீட்டுக்கு அனுப்பப்பட்டுவிடுவார். இதற்கான ஏற்பாடுகளை ஐக்கிய தேசிய முன்னணி மேற்கொண்டு வருகின்றது -

இவ்வாறு அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கா தெரிவித்தார். (ஐ-7)

## விளையாட்டு நிகழ்வு

ஊர்காவற்றுறை,பெப்.3

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மென்பந்துத் துடுப்பாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. (ம-16)

# வாசகர் திருமுகம்

## தொண்டர் நிறுவனங்களுக்கு ஒரு வேண்டுகோள்!

'நிவாரணம்' என்னும் பெயரில் தொடர்ந்தும் இடர் தணிப்புப் பணியில் ஈடுபடுதல் மக்கள் செயலற்றுச் சோம்பி விரும்பத்தகாத செயல்களில் நாட்டம் கொள்ளத்தூண்டும். ஒவ்வொருவரும் தாமாகவே செயற்பட்டு தம் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை உழைத்துத் திரட்ட உதவுவதே மெய்யான தொண்டாகும்; தன்னம்பிக்கையோடு தம் கால்களில் நிற்க மக்களுக்கு உதவுவதே நீடித்த நற்பயன் விளைக்கும்.

அண்மையில் தென்மராட்சி மக்கள் எய்திய இழப்பு எத்தகையது என யாவரும் அறிவர். அப்பகுதியை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு மக்கள் அங்கு விரைவில் குடியேறவேண்டும். மக்கள் இன்றி மீளமைப்புப் பணிகள் இடம்பெறா. முற்றாகச் சிதைந்தவை, கட்டமைப்பின் பெறுமதி மிக்கப் பாகங்கள் அகற்றப்பட்டு அல்லது எறிகணை வீச்சினால் சிதைவுற்று பெருமளவு சேதத்துக்கு உள்ளானவை, மிகச் சிறு பாதிப்புகளுக்குள்ளானவை என அங்குள்ள வீடுகளை மூவகையாகப் பிரிக்கலாம்.

முதற்பிரிவினருக்கு மீண்டும் புதிதாக வீடு அமைக்கும் பெரும் நெருக்கடி உள்ளது. பலரால் இத்தேவையை நிறைவுசெய்ய முடியாது. அரசின் உதவி எளிதில் உரிய அளவில் விரைவில் கிடைக்கக்கூடியதல்ல. நடைமுறை இழுபறிகளுக்கு அதிகம் இடமளிக்காத தொண்டர் நிறுவனங்கள் இவர்களுக்குக் கைகொடுக்க முன்வருதல்வேண்டும். வீடமைப்பதற்கு வேண்டியனவற்றுள் இன்றியமையாதனவற்றைக் கொடுத்துதவினால், பெரும்பாலானோர் தாமாகவே தமக்குரிய வீடுகளை அமைக்கும் பணியில் விருப்போடு ஈடுபடுவர்.

மூன்றாவது பிரிவினர் தம் கையே தமக்குதவி எனும் துணிவோடு தத்தம் வீடுகளை செப்பனிட்டு மீண்டும் குடியேறத் தொடங்கியுள்ளனர்.

இரண்டாம் பிரிவினரோ 'இரண்டும் கெட்டான்' நிலையில் உள்ளனர். வீடுகள் முற்றாகச் சிதைவுறாவிடினும் குடியமர்வதற்கு ஏற்ற நிலையில் அவை இல்லை. பெரும்பாலான வீடுகளில் கதவு, நிலை என்பன அகற்றப்பட்டுள்ளன. கூரைத் தகடு, ஓடு, கை மரம் என்பனவும் பலவற்றில் இல்லை. கதவுகளுக்குத் தேவையான பலகை எளிதில் கிடைப்பதாக இல்லை. ஒரு சதுர அடி வேப்பம் பலகை நூறு ரூபா வரை விலை ஏறியுள்ளது. தெற்கிலிருந்து வலிய மரப் பலகைகளைப் பெற்று கழிவு விலையில் இவர்களுக்குக் கிடைக்கச் செய்யின் அதுவே பெரும் தொண்டாகும். இவ்வாறே கூரைத் தகடு, ஓடு, மரம், சிமெந்து என்பனவற்றையும் கழிவு விலையில் எளிதில் கிடைக்கச் செய்யின் இப்பிரிவினர் விரைந்து மீளக்குடியமர்வதற்கு வாய்ப்பு மிகும்.

விரைந்து செயற்படவேண்டிய தேவை இன்று உள்ளது. காலம் கடத்தாது சிற்றூர் அலுவலர்களூடாகத் தேவைப்படும் விவரங்களைத் திரட்டிப் பழுதறத் திட்டமிட்டு மீளக்குடியமர முடியாதவாறு பாதிப்புக்குள்ளானவருக்கு உதவ முன்வருமாறு இத்துறையில் நாட்டமுள்ள தொண்டர் நிறுவனங்களை வேண்டுகிறோம்.

*வண்ணார்பண்ணை.* **பாதிப்புக்குள்ளானவன்.**

## சங்கங்களுக்கு வரும் ம.எண்ணெய் மக்களுக்கு சீராகக் கிடைக்குமா?

ஜனவரி மாதம் 15ஆம் திகதி யாழ்.செயலகத்தில் அரச அதிபர் தலைமையில் நடைபெற்ற மண்எண்ணெய் விநியோகம் தொடர்பான கூட்டத்தில் ஒவ்வொரு மாதமும் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் ஊடாக பங்கீட்டு அட்டைக்குத் தலா 4 லீற்றர் மண்எண்ணெய் வழங்குவதென்று தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அவர்களது பங்கீட்டு அட்டைகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு 4 லீற்றர் விநியோகிக்கக் கூடியவாறு எண்ணெய் வழங்கப்பட்டதாக யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. ஆனால் நீர்வேலிச் சங்கத்தைப் பொறுத்தவரையில் இது நடக்கவில்லை. மாசுவன் பகுதியில் உள்ள கிளையில் பங்கீட்டு அட்டைக்கு இன்றுவரை 1 லீற்றர் மட்டுமே வழங்குகிறார்கள்.

இது பற்றிக் கேட்டால் ஏற்கனவே மூன்று லீற்றர் வழங்கப்பட்டுவிட்டமையால் அடுத்த தடவை 4 லீற்றர் தருவதாகச் சொல்கிறார்கள். அவ்வாறாயின் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் கடந்த மாத இறுதி வரை விநியோகத்துக்கு வழங்கப்பட்ட எண்ணெய் நீர்வேலிச் சங்கத்தைப் பொறுத்தவரையில் எங்கேபோய்விட்டது?

இதுமட்டுமல்ல 2000ஆம் ஆண்டு மே மாதம் பெற்றோலுக்கும் இதே நிலைதான் ஏற்பட்டது. படையினர் மீது பழிபோட்டார்கள். வேறு ஏதோ எல்லாம் சொன்னார்கள். பொதுமக்கள் விவேகிகள் என்பதை அவர்கள் மறந்துவிட்டார்கள். பெருச்சாளிகள் எங்கும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

தற்பொழுது மழை பெய்துள்ளமையால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட எண்ணெயும் விநியோகிக்கப்படாமல் உள்ளது. இதற்கெல்லாம் என்ன பதில் சொல்லப்போகிறார்கள்?

*மாசுவன்* **சு.நடேசலிங்கம்.**

அதிபர் தேர்தலில் முறைகேடாம்

# மடகஸ்கர் தலைநகரில் மக்கள் ஆர்ப்பாட்டம்!

அன்ரனாரிவோ,பெப்.3

மடகஸ்கரின் தலைநகர் அன்ரனாரிவோவில் கடந்த் சில நாள்களாக மக்கள் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த டிசெம்பரில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முதற்சுற்று வாக்களிப்பின் பின்னர் தாமே வெற்றி பெற்றதாக எதிர்க்கட்சி வேட்பாளராகப் போட்டியிட்ட மார்க் ரவலோமானானா கூறி வருகிறார். ஆனால் வாக்களிப்பின் முடிவை அறிவிப்பதை மடகஸ்கர் தேர்தல் ஆணையம் தாமதித்து வருகிறது.

வாக்குப் பதிவின்போது முறைகேடுகள் நடந்ததாகவும் - களிப்பு நடத்தவேண்டுமென்றும் -

மடகஸ்கர் உயர்நீதிமன்றம் உததரவிட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த சில நாளகளாக தலைநகர் அன்ரனாரிவோவில ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டம் செய்துவருகின்றனர். எதிர்க்கட்சி வேட்பாளர் ரவலோமானானாவை ஜனாதிபதியாகப் பிரகடனப்படுத்தும்படி அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

தற்போதைய அதிபர் டியியே ராசிகாரா கடந்த 20 ஆண்டுகளாக பதவியில் இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-ரி)



பலகோடி டொலர்கள் மதிப்புள்ள வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாது மோசமான பொருளாதார சீர்குலைவில் சிக்கியுள்ள ஆர்ஜென்ரீனாவில் அந்நாட்டு நாணயமான பெசோவின் மதிப்பு விரைவில் அதலபாதளமளவுக்கு குறைந்துவிடும் என்று அஞ்சப்படுகிறது. இதனால் தமது சேமிப்புக்களை அமெரிக்க டொலர்களாக மாற்றுவதில் ஆர்ஜென்ரீனர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

போனர்ஸ் அயர்ஸில் உள்ள தேசிய வங்கியில் டொலர்களை வாங்கிக் கொள்ள ஆவேசத்துடன் முண்டியடிக்கும் ஆர்ஜென்ரீனர்களை படத்தில் காணலாம்.

# அமெரிக்கப் படை விமானத்தின் மீது பிலிப்பைன்ஸில் பீரங்கித் தாக்குதல்!

மணிலா,பெப்.3

பிலிப்பைன்ஸில் அமெரிக்க இராணுவ விமானம் ஒன்று சிறுரகப் பீரங்கித் தாக்குதலுக்கு இலக்கானதாக செய்திகள் வெளியாகியுள்ளன. பிலிப்பைன்ஸ் படையினருக்கு அமெரிக்க இராணுவத்தினர் போர்ப் பயிற்சிகளை நடத்திய சமயமே இத்தாக்குதல் நிகழ்ந்துள்ளது.

'அபுசாயப்' உட்பட இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புகள் பிலிப்பைன்ஸ் அரசை எதிர்த்துப் போராடி வருகின்றன. இவற்றை ஒழித்துக்கட்ட பிலிப்பைன்ஸ் படையினருக்குப் பயிற்சியளிப்பதாகக் கூறிக் கொண்டு பெருமளவிலான அமெரிக்க இராணுவத்தினர் அங்கு தரையிறக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் பிலிப்பைன்ஸ் படையினருடன் இணைந்து தமது இராணுவப் பயிற்சியை நேற்றுமுன்தினம் ஆரம்பித்தனர் ஆனால் பயிற்சியின் முதல்



அமெரிக்கப் படையினருக்கு பிலிப்பைன்ஸில் வரவேற்பு

நாளிலேயே தீவிரவாதிகளின் பீரங்கித் தாக்குதலுக்கு அமெரிக்க விமானம் இலக்கானதாகக் கூறப்படுகிறது.

தாக்குதல் சம்பவத்தின் சேத விவரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இதேசமயம், இந்தச் சம்பவம் திட்டமிட்ட நாடகம் என்று இஸ்லாமியத் தீவிரவாதிகளின் ஆதரவுப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸ் வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கவே அமெரிக்கப் படையினர் அங்கு வந்திருப்பதாகவும் -

ஆனால் அமெரிக்கப் படையினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் தீவிரவாதிகளுக்கு அவர்கள் பதிலடி கொடுப்பார்கள் என்றும் -

பிலிப்பைன்ஸ் அதிபர் குளோரியா அரோயா தெரிவித்திருப்பதைச் சுட்டிக்காட்டிய அப்பத்திரிகை, தீவிரவாதிகள் மீது தாக்குதல் தொடுக்க காரணம் தேடும் அமெரிக்கா அதற்காக நடத்திய நாடகமே அது என்று குறிப்பிட்டுள்ளது.

(ஒ)

## இந்திய மண்ணில் இலங்கைப் பேச்சுக்கு காங்கிரஸ் எதிர்ப்பு

புதுடில்லி,பெப்.3

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இந்திய மண்ணில் பேச்சு நடப்பதை முற்றாக எதிர்ப்பதாக இந்திய காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ளது.

புதுடில்லியில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அந்தக் கட்சியின் செய்தித் தொடர்பாளர் எஸ். ஜெயபால் ரெட்டி இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட ஓர் அமைப்பு என்பதைச் சுட்டிக்காட்டிய அவர், அதேசமயம் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே அமைதிப் பேச்சு நடப்பதை காங்கிரஸ் எதிர்க்கவில்லை என்றும் தெளிவுபடுத்தினார்.

(ஒ-ரி)

# பாக். சிறப்பு நீதிமன்றங்களில் நீதிபதிகளாக இராணுவத்தினர்

## எதிர்க்கட்சிகள் கண்டனம்

இஸ்லாமாபாத்,பெப்.3

பாகிஸ்தானில் பயங்கரவாதக் குற்றங்களை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றங்களுக்கு இராணுவ அதிகாரிகளை நீதிபதிகளாக நியமிக்க இராணுவ அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஓர் இராணுவ அதிகாரியும் வேறு இரண்டு சிவில் நீதிபதிகளையும் கொண்ட 3 பேர் அமர்வு, சிறப்பு நீதிமன்றங்களில் இனிமேல் விசாரணைகளை நடத்தும்.

இதன் மூலம் பயங்கரவாதம் தொடர்பாகக் குற்றஞ்சாட்டப்பட்டவர் அதிலிருந்து சுலபமாக விடுபட முடியாத - மிகக் கடுமையான தண்டனைக்கு உள்ளாக நேரிடும் ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது.

ஆனால் இந்த உத்தரவு ஜனநாயக விரோதமானது; சட்டத்தை மீறுவதாக உள்ளது என்று விமர்சனங்கள் எழுந்துள்ளன. பாகிஸ்தானில் மீண்டும் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதில் இது இடையூறாக இருக்குமென்று எதிர்கட்சிகள் கண்டித்துள்ளன.

(ஒ)

# ராமர் கோயில் கட்டும் விவகாரத்துக்கு இந்தியாவில் மீண்டும் முக்கியத்துவம்

புதுடில்லி,பெப்.3

இந்தியாவில் இராமர் பிறந்த இடமாகக் கருதப்படும் உத்தரப் பிரதேச மாநிலம் அயோத்தியில் இராமர் கோயில் கட்டும் திட்டத்தை எதிர் வரும் மார்ச் மாதம் 12ஆம் திகதிக்குப் பின்னர் செயற்படுத்தப்போவதாக தீவிர இந்துத்துவ அமைப்பான விஸ்வஹிந்துப் பரிஷத் அறிவித்துள்ளது.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் உறுதியுடன் இருப்பதாகவும் -

எக்காரணத்தைக் கொண்டும், எவருக்காகவும் இராமர் கோயில் கட்டும் தமது திட்டம் கைவிடப்படமாட்டாது என்றும் -

விஸ்வஹிந்து பரிஷத்தின் தகவல் தொடர்பாளர் ஷரத் சர்மா தெரிவித்துள்ளார்.

அயோத்தியில் இராமர் கோயில் கட்டுவது ஆளும் பாரதிய ஜனதாக் கட்சியின் செயற்றிட்டத்தில் இடம்பெறவில்லை என்று சமீபத்தில் பா.ஜ.க. தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்தே விஸ்வ ஹிந்து பரிஷத் தனது அறிவிப்பை வெளியிட்டது.

ஆட்சியைப் பிடிக்கும் முன்னர் பாரதிய ஜனதாக்கட்சி அயோத்தியில இராமர் கோயில் கட்டவேண்டும் என்பதில் உறுதியாக இருந்ததாகவும் -

அந்தக் கோஷத்தை முன்வைத்தே ஆட்சிக்கு வந்த பா.ஜ.க. தலைவர்கள் தற்போது இராமர் கோயில் கட்டும் விடயத்தில் மௌனம் காப்பதாகவும் -

பா.ஜ.கவின் மூல அமைப்புகளான ஆர்.எஸ்.எஸ். மற்றும் விஸ்வ ஹிந்துப் பரிஷத் ஆகியவை விசனமடைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இஸ்லாமியத் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் இந்தியாவில் அதிகரித்துவரும் - பாகிஸ்தானுடனான உறவு முறுகல் நிலையை அடைந்துள்ள - இந்தச் சமயத்தில் அயோததியில் இராமர் கோயில் கட்டும் விவகாரம் மீண்டும் முன்னிலைப்படுத்தப் படுவது இந்தியாவில் விரும்பத்தகாத சம்பவங்கள் இடம்பெற வழிவகுக்கும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

அயோத்தியில் இராமர் பிறந்த இடம் என்று நம்பப்பட்ட பகுதியில் கட்டப்பட்டிருந்த பாபர் மசூதி சில ஆண்டுகளின் முன்னர் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டதும் -

அதே இடத்தில் இராமருக்குக் கோயில் கட்ட தீவிர இந்துத்துவ அமைப்புகள் முயற்சித்து வருவதும் - தெரிந்தவையே.

(ஒ-ரி)

உலக அரங்கில்

## அமெரிக்கா ஏவுகணை பரிசோதனை

வாஷிங்ரன்.பெப்.3

கப்பலில் இருந்து செலுத்தப்படும் தற்காப்பு ஏவுகணையை பசுபிக் கடற்பகுதியில் அமெரிக்கா வெற்றிகரமாக பரிசோதித்துள்ளது.

# கட்டாக்காலி நாய்களை அழிக்க ஆப்கானிஸ்தானில் நடவடிக்கை

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகம் காணப்படுகிறது. ஆகவே அவற்றை அழிக்கும் நடவடிக்கைகள் பாரிய அளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அங்கு இலட்சக்கணக்கில் பெருகியுள்ள விலங்குகளின் மூலம், விசர் நாய்க்கடி உள்ளிட்ட விலங்குகளால் பரவும் நோய்கள் மக்களிடையே பரவிவருகின்றன.

பொது மருத்துவத்துறை பெரிதும் சீர்குலைந்துள்ள நிலையில் நோய்கள் பரவுவது மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. அதனாலேயே நோய்களைப் பரப்பும் விலங்குகளை அழிக்க இடைக்கால அரசு நடவடிக்கை மேற்கொள்டுள்ளது.

1996ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தானின் ஆட்சியைக் கைப்பற்றிய தலிபான் இயக்கம் செல்லப் பிராணிகளை வீடுகளில் வளர்க்கத் தடைவிதித்தது. அதனால் நாய்கள் உட்பட ஆயிரக்கணக்கான வீட்டு விலங்குகள் வீதிக்கு விரட்டப்பட்டன. அவை தற்போது பெருமளவில் பெருகியுள்ளன.

(ஒ-ரி)

# நைஜீரியத் துணை அதிபர் மீது படையினர் அழுகிய பழ வீச்சு!

## தீ விபத்து நிவாரணம் கிடைக்காததால் ஆத்திரம்

லாகோஸ்,பெப்.3

நைஜீரியாவின் துணை அதிபர் அட்டிகு அபூபக்கர் மீது அந்நாட்டு இராணுவத்தினர் தண்ணீர்ப் போத்தல்கள் மற்றும் அழுகிய பழங்கள் ஆகியவற்றை வீசித் தமது கோபத்தைக் காட்டினர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை லாகோஸில் இடம்பெற்ற இராணுவ ஆயுதக் களஞ்சிய தீவிபத்தில் தமது வீடுகளை இழந்த நூற்றுக்கணக்கான இராணுவத்தினரே, விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட வந்த துணை அதிபர் மீது தமது ஆத்திரத்தைக் காட்டியுள்ளனர்.

திரண்டு நின்ற இராணுவத்தினரின் ஏளனக் கூச்சலால் அங்கு உரையாற்ற முடியாமல் துணை அதிபர் திரும்பிவிட்டதாகக் கூறப்படுகிறது.

தீவிபத்துக்குப் பின்னர் இராணுவக் குடியிருப்பின் மத்தியில் கிடக்கும் வெடிக்காத வெடிகுண்டுகள் அகற்றப்படவில்லை என்றும் -

நிவாரண உதவிகள் அனைத்தும் உயர்அதிகாரிகளுக்கு மட்டுமே சென்றடைவதாகவும் -

அங்கு நின்ற படையினர் கூச்சலிட்டனர். அந்தச் சமயத்தில் அங்கு நின்றிருந்த மக்களும் கைகள் நிறைய மண்ணை அள்ளி துணை அதிபரின் காரின் மீதும் வீசியதாகக் கூறப்படுகிறது.

தீவிபத்து நிகழ்ந்து ஒருவார காலமாகியும், தமக்கு பாணும், குடிதண்ணீரும் மட்டுமே வழங்கப்படுவதாகவும் -

போதுமான உணவோ, மாற்றுடைகளோ இதுவரை வழங்கப்படவில்லை என்றும் -

இராணுவத்தினர் உட்பட தீவிபத்தில் பாதிக்கப்பட்டவாகள் தெரிவித்ததாக பி.பி.ஸி. செய்தி வெளியிட்டுள்ளது.

இகேஜா இராணுவ முகாமின் ஆயுதக் களஞ்சியத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தீப்பற்றி எரிந்ததில் இராணுவ முகாம் மற்றும் அருகிலிருந்த குடியிருப்புகள் ஆகியவை அழிந்தன.



தீ விபத்து இடம்பெற்று ஒருவார காலமாகியும் அங்குள்ள கால்வாயில் உள்ள பிணங்களை மீட்கும் பணி தொடர்கிறது. உயிர்தப்ப ஓடியவர்கள் கால்வாயில் விழுந்து மூழ்கி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த விபத்தில் சுமார் 600 பேர் உயிரிழந்ததாகவும் - மேலும் 500 பேர்வரை காணாமற் போயுள்ளதாகவும் - கூறப்படுகிறது.

(ஒ)

# உலக ஈரலிப்புப் பூமி தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது

லண்டன்,பெப்.3

உலக ஈரலிப்புப் பூமி தினம் நேற்று சர்வதேச ரீதியில் அனுஷ்டிக்கப்பட்டது.

ஈராக்கிய நகரான ரஷாவில் கைச்சாத்திடப்பட்ட ஈரலிப்பும் பூமி பேணல் உடன்படிக்கையில் பல நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இந்த நாடுகளில் பூமியின் ஈரலிப்பு நிலையைப் பேணிப் பாதுகாப்பது தொடர்பாக மக்களுக்குப் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான பல திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

ஈரலிப்புப் பூமி பாதுகாப்புத் திட்டத்தின் இந்த வருடத் தொனிப் பொருள்களாக, ஈரலிப்புக் காரணிகள், ஈரலிப்பு நிலங்கள், நீர் மற்றும் கலாசாரம் ஆகியவை விளங்குகின்றன.

உயிரியல் பன்முகத்தன்மை, சூழல் சமநிலை ஆகியவற்றைப் பேணுவதற்கான திட்டங்கள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட உள்ளது.

(ஒ-ரி)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## புதிய நூல்

"ஆற்றல் பல நல்கும் ஆஞ்சநேயர்" விலை ரூபா 40. கோப்பாய் சிவம் எழுதியது. ஆஞ்சநேயர் வழிபாட்டு முறைகள், விளக்கங்கள் அடங்கியது. பிரபல புத்தகக்கடைகளில் பெறலாம். (077)

## மணமகன் தேவை

யாழ்.இந்து கௌரவமான, வயது 36, ஆசிரியை (விசேட பயிற்சி), அனுஷ நட்சத்திரத்துடன் 8இல் நட்டம் பெற்ற, செவ்வாய்த்தோஷம் குறைந்த ஜாதகி பொருத்தமான, அரச/கூட்டுத்தாபன உத்தியோகத்தர் விரும்பத்தக்கது. தொடர்பு: விள.இல.1441, C/o உதயன், யாழ்ப்பாணம். (033)

## மணமகள் தேவை

கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த, சுவாதி நட்சத்திரம், 32 வயது, எட்டு வருடங்களாக லண்டனில் தொழில் புரிந்துகொண்டு கணக்கியல் இறுதி ஆண்டில் கற்கும் மணமகனுக்கு தங்கள் செலவிலேயே லண்டனுக்கு அனுப்பிவைக்கக்கூடிய மணமகள் தேவை. விள.இல.1447, C/o உதயன், யாழ்ப்பாணம். (171)

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, லண்டனில் வசிக்கும குடியுரிமைபெற்ற, நல்லொழுக்கமுள்ள மணமகனுக்கு அழகிய, நற்பண்புள்ள மணமகள் தேவை. மணமகள உயரம் 5 அடிக்கு மேற்படாமல் இருதல் அவசியம். குறிப்பு புகைப்படத்துடன் தொடர்பு: விளம்பர இல. 1450, மே/பா, உதயன். (255)

## தவறிவிட்டது

நுணசை வீதி, மாதகல் என்னும் முகவரியைச் சேர்ந்த இராசரத்தினம் மதீஸ்வரன் என்பவரது தேசிய அடையாள அட்டை (800854733V) 01.02.2002 வெள்ளிக்கிழமை யாழ்.சத்திரத்துச் சந்திக்கு அண்மையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வீரபத்திரர் வீதி, கோண்டாவில் வடக்கு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (249)

## ராகு கேது மாற்றம் நாட்டுக்கு எப்படி?

எங்கும் விற்பனையாகின்றது. மே மாதமளவில் இடப ராசியில் பாவக் கிரகங்கள் கூடுவதால் யுத்தத் தயாரிப்புத் தந்திரோபாயங்களால் சமாதான முட்டுக்கட்டைகளையும் அரசுக்குப் பாரிய அரசியல் நெருக்கடிகளையும் உண்டாக்கும். கணிப்பாசிரியர் - சத்யா, 3ஆம் மைல், ஆனைக்கோட்டை. (177)

## இலகு திருமண சேவை

1972 உத்திரட்டாதி, 12 செவ்வாய், பட்டதாரி ஆசிரியைக்கு பொருத்தமான மணமகன் உள்ளூரில்/வெளியூரில் தேவை. சீதனம் உண்டு. மணமக்களின் தேவையை பூர்த்திசெய்ய தொடர்புகொள்ளவும: துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (264)

## இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு

தரமான புறொயிலர் கோழிகள் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து 1/2 கிலோவில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு:227, பிறவுண் வீதி, (நரிக்குன்றுக்கு அருகில்) யாழ்ப்பாணம். (212)

Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுத்தம்செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்லாம். தொடர்பு: 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (068)

இறைச்சிக்கோழி (Broiler), கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம்செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.15, 6ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (97518)

புறொயிலர், கல்பேட்ஸ் இறைச்சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. புறொயிலர் 1Kg 130/-. வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்துகொடுக்கப்படும். தொடர்பு: ராஜீவ், ஆனைக்கோட்டை சந்தி. T.P 3529, 2867 (257)

## விற்பனைக்கு

100% தரமான நல்லினப் புகையிலை (வடமராட்சிக் சுரன், தட்டையன்) மற்றும் மிளகாய் நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: N.சிவலிங்கம், பலாலி வீதி, (பெற்றோல் செற் முன்பாக), உரும்பிராய். (227)

2 1/2 மாதம் நிரம்பிய பொமனேரியன் நாய்க்குட்டிகள், 6700k.m. ஓடிய QINGQI - 90 மோட்டார் சைக்கிள், 2093 - REMOTE CONTROL என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ரா. இந்திரஜித் P.H.I. இணுவில் தெற்கு, (பரராஜசேகரப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில்). (236)

பொமனேரியன் ஆண் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 169, மருத்துவ பீடம் முன்பாக, திருநெல்வேலி. (248)

11/2 வயது - 2வயது நிரம்பிய டாய்சொண் கறுப்பு, பிறவுண் நிறமுடைய பெண் நாய்களும் 11/2 மாதம நிரம்பிய டாய்சொண் பிறவுண் குட்டிகளும், சிலிக்கி, வெள்ளை, சாம்பல் நிறமுடைய கோழிகளும் விற்பனைக்கு உண்டு. இல.70, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். (254)

PIONEER BOX ஒருசோடி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.141, கேணியடி, திருநெல்வேலி. (231)

புதிய வண்டிலும் மாடும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கு.கருணாகரன் (கலைவாணி பாடசாலைக்கு அருகில்), கைதடி மேற்கு, கைதடி. (248)

## வீடு விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, ஈவினை பகுதியில் 7 1/2 பரப்பு காணி கிணறு, வீடுனும் தோட்டக்காணி (12 பரப்பு) உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: தம்பிராசா இராசரத்தினம், குளங்கரை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (237)

## வீடு வாடகைக்கு

கொடிகாமத்தில் பருத்தித்துறை வீதியில் (சந்தியில் இருந்து 300யார் தூரத்தில்) சகல வசதிகளும் கொண்ட (பலன்தரும் மரங்களுடன்) கல்வீடு வாடகைக்கு உண்டு. (அரச நிறுவனங்களுக்கும் கொடுக்கப்படும்) தொடர்பு இல 70 (34), கோயில் வீதி, யாழ்ப்பாணம். (177)

---

உரும்பிராய்

# கருணாகரப் பிள்ளையார் கோயில் மணவாளக் கோல விழா

நாளை (04.02.2002) திங்கட்கிழமை முற்பகல் 9மணி சங்காபிஷேகம் (1008 சங்குகளால்)

விசேட மேளக்கச்சேர பிற்பகல் 4.30 மணி, விசேட பூசை

சொற்பொழிவு -"விநாயகர் வழிபாடு"

வழங்குபவர்: சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை

இன்னிசைவிருந்து: சங்கீதபூஷணம் அளவையூர் வி.கே. நடராசா குழுவினர்

மாலை 6.30மணி - திருவூஞ்சல் நடைபெற்று,கருணாகரப் பெருமான் பூந்தண்டிகையில் திருவீதி எழுந்தருளுவார்.

அடியார்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

*கருணாகரப்பிள்ளையார் கோயில், உரும்பிராய்.* - திருப்பணிச்சபையினர். (258)

---

வெளிவந்துவிட்டது! விற்பனையாகிறது!

சித்திரபானு வருஷத்துக்கான (2002 - 2003)

## திருக்கணித பஞ்சாங்கம்

வழமையான அம்சங்களுடன் கிரகஸ்புடங்களும், யாழ்ப்பாணத்துக்குரிய பாவஸ்புட பதகமும் (Tables of Houses) சேர்க்கப்பட்டுள்ளன.

*மட்டுவில், சாவகச்சேரி.* (267) திருக்கணித நிலையம்.

---

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 1975 - 05 - 27

விண்ணில் 2001 - 12 - 21

## அமரர் இராசையா பிரபாகரன்

நாள்கள் தான் ஓடி மறைந்தாலும் பிரபா என்று
அழைக்கையிலே உணராத பாசத்தை
இப்போதும் நினைக்கையிலே கண்ணீர்தான் ஆறுதலோ?
எம்மை எல்லாம் விட்டகல எப்படி ஐயா மனம் கொண்டாய்?
பிஞ்சுப்பாலகனையும் ஆசை மனைவியையும்
பரிதவிக்க விட்டுச் செல்ல மனம் வந்ததோ உனக்கு?
உன் நினைவுகளைச் சுமந்தபடி தனிமரமாய்
வாழ்கிறார்கள் உன் மனைவியும் பிள்ளையும்.

(266)

*பாரதிபுரம், திருநெல்வேலி.* - *குடும்பத்தினர்.*

---

## சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை வடமராட்சியிலேயே இயங்கும்

தென்மராட்சி,பெப்.3

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை தொடர்ந்தும் வடமராட்சி அல்வாயில் இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலையின் கட்டடம் சேதமடைந்துள்ளதாலும், பாடசாலை சுற்றாடல் பொதுமக்களின் பாவனைக்கு இன்னமும் விடப்படாததாலும் பாடசாலையை உடனடியாக சொந்த இடத்தில் திறப்பதற்கான சத்தியக்கூறு ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-117)

---

# கல்வி உலகின் சஞ்சலத்துக்கு காரணமாய் அமைந்த மரணம்



எமது மண்ணின் மாபெரும் ஆசானாகவும் அன்பு நெஞ்சங்களில் அகலாது குடியிருக்கும் அன்பனாகவும் சாந்த சொரூபியாகவும் விளங்கியவர் அமரர் ஆ.மகாதேவன் அவர்கள். இவருடைய மறைவு கல்வி உலகுக்கு அளப்பரிய துயரைத் தந்து கொண்டிருக்கிறது. தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு எனது மாணவர்களில் ஒருவராக விளங்கியவர் இவர். கண்ணியமான போக்கும், பணிவான சுபாவமும், கடவுள் நம்பிக்கையும், கல்வியிலே நாட்டமும் ஒருசேரப் பெற்றவர் இவர். அந்தக் காலம் எம்மனைவரின் கல்வி வாழ்வில் ஒரு பொற்காலமாகும். இதற்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்கியவர் அமரர் மகாதேவன் அவர்கள். இவருடைய மறைவு கல்வி உலகின் சஞ்சலத்துக்குக் காரணமாய் அமைந்துள்ளது. இட்டு நிரப்பமுடியாத கல்விப் பீடம் இவருடையது. இதனால் இரசாயனவியல் பயிலும் ஆசிரியர்களும், மாணவர்களும் அல்லல்படுகின்றனர். என்ன செய்வோம். காலனை நோகமுடியுமா? காலத்தை நோகமுடியுமா? முடியாது. தமிழினத்தின் தலை விதியைத்தான் நொந்து கொள்வோம். அமரருக்காகப் பிரார்த்திப்போம். அவர் குடும்பத்துக்கு ஆறுதல் சொல்வோம். இறையருளை வேண்டி நிற்போம். இவைதான் எமக்கு ஒரே வழி.

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

கலாநிதி செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி**

## நீத்தார் நயப்புரை

---

அளவெட்டி அணிஞ்சிலடி விநாயகர் ஆலயம்

# இசையரங்கம்



யாழ்.பல்கலைக்கழக உதவி விரிவுரையாளர்

**ஸ்ரீ.தர்ஷனனின்**

*தெய்வீக இசைநிகழ்வு*

நாளை (04-02-2002) திங்கள் மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும்.

**இசை ஆர்வலர்கள் ரசிக்க வருக!**

- உபயகாரர்.

(265)

---

காரைநகர் வடக்கு

அருள்மிகு மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

# பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

விநாயகர் அடியார்களே!

நாளை (04.02.2002) திங்கட்கிழமை காலை 6.15 மணிக்கு மேற்படி ஆலயம் பாலஸ்தாபனம் செய்வதற்கு திருவருள் பாலித்துள்ளது.

இந்நிகழ்வுக்கு அடியார்கள் அனைவரும் வருகைதந்து விநாயகப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*மருதடி, காரைநகர்.* (265) - பொறுப்புரிமையாளர் சபை.

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 1932 - 08 - 15

உதிர்வு 2001 - 01 - 14

## அமரர் ஆறுமுகம் முத்தையா ஐயாத்துரை

(ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர்)

ஓராண்டு ஓடிக்கழிந்ததப்பா இன்று
ஓடாது வாடித் துடிக்கின்றோம் ஒன்றாய்!
பார் தன்னில்உங்கள் இனியமுகம் காணாது
பெருந்துயரங் கொண்டே வாடுகின்றோம் அப்பா!
சீராக எம்மைச் செகந்தனிலே வாழவைத்த
பேறுயர் அப்பாவே பிரிந்துமேன் சென்றீர்?
ஆறாத துயரத்தால் வாடுகின்ற எமக்கு
ஆறுதலைத் தந்திடவே அவனிதனில் வாரீர்!

*9/1, சுப்பிரமணியம் வீதி, அரியாலை.* (273)

உங்கள் பிரிவால் துயருறும்: *மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

---

# இதய அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் **திரு.நா.சோமஸ்கந்த மூர்த்தி** அவர்களின் அன்புச் சகோதரர்

## நாகேந்திரம் ஜெகதீஸ்வரன்

அவர்கள் 25.01.2002 அன்று அகாலமரணம் அடைந்தமையால் அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

*தெல்லிப்பழை.* (259)

நலன்புரிச்சங்கம், பிரதேச செயலகம், வலி.வடக்கு.

உதயன்

## குட்டையை குழப்புகிறார் ஜனாதிபதி

முழு நாட்டையும் சுட்டெரித்து வந்த இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் நோக்கில் அரசுத் தரப்பும் புலிகளும் பேச்சுநடத்தி ஓர் இணக்கமான தீர்வுக்கு வந்தாலும் நாட்டின் தலைவியான ஜனாதிபதி அதற்குக் குறுகே நின்று குழப்பியடித்துவிடுவாரோ என்ற சந்தேகம் நாட்டு மக்கள் மத்தியில் - குறிப்பாக - தமிழ்மக்கள் மத்தியில் வலுத்துவருகிறது.

நாட்டில் யுத்தமோ, சமாதானமோ எதுவானாலும் முடிவு எடுக்கும் உரிமை தனக்குரியதே என்று அண்மையில் பேட்டி ஒன்றில் தனக்கேயுரிய அதிகாரத் தொனியில் ஜனாதிபதி குமாரதுங்க கருத்துத் தெரிவித்திருந்தார். இதனை மீண்டும் வலியுறுத்துவது போன்று நேற்றுமுன்தினம் அவர் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

சமாதான முயற்சிகள் எதுவானாலும் அதுபற்றி அறிவிப்பதும், பேச்சுக்கான உத்தியோகபூர்வ பிரகடனத்தைச் செய்வதும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களாகும் அதனைப் பிரதமரோ, நாடாளுமன்றமோ நடைமுறைப்படுத்த முடியாது - என்றும் ஜனாதிபதி மீண்டும் முழங்கியிருக்கிறார்.

"நாட்டின் தேசிய நலன்கருதி தேசியப் பாதுகாப்புக்கும், ஆரோக்கியமான செயற்பாட்டிற்கும் ஜனாதிபதியின் அதிகாரங்களே பொருத்தமானவை. பயங்கரவாத நடவடிக்கைகளுக்குத் துணைபோகும் அமைப்புகளுடன் முன்னெச்சரிக்கையற்ற அரசின் தொடர்புகளுக்கு ஜனாதிபதி பொறுப்பானவர் அல்லர்"- என்ற வாசகங்களும் ஜனாதிபதியின் சார்பில் அவரது செயலாளரால் விடுக்கப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அதில் 'பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அமைப்புகளுடன் முன்னெச்சரிக்கை அற்ற அரசின் தொடர்புகள்' என்று விடுதலைப் புலிகள் அமைப்புடனான புதிய அரசின் சமாதான முயற்சிகளையே ஜனாதிபதி சுட்டுகிறார் என்பது தெரிகிறது.

முழுநாட்டையுமே அழிவுப்பாதைக்கு இட்டுச் சென்றுகொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணத் தற்போது எடுக்கப்பட்டிருக்கும் சமாதான முயற்சிகள் தொடர்பாக ஜனாதிபதி எதிர்காலத்தில் எடுக்கக்கூடிய தீர்மானங்கள் எப்படி அமையலாம் என்பதை அவரது தற்போதைய கருத்துக்கள் கோடிகாட்டுகின்றன.

சமாதானம் என்ற இலக்கை அடையும் பயணத்தில் பிரதமர் ரணிலின் அரசு கணிசமான முன்னேற்றம் கண்டிருக்கிறது. சமாதானப் பேச்சுக்கு மிக அவசியமான நல்லெண்ணப் புறச் சூழ்நிலையை உருவாக்குவதில் அரசுத்தரப்பும் விடுதலைப் புலிகளும் மிகுந்த கண்ணுங் கருத்துமாக இருப்பதால் அதற்கான முயற்சிகள் சரியான திசையில் நகர்த்தப்பட்டுவருகின்றன.

இந்நிலையில் -

'சமாதானத்துக்கான யுத்தம்' மூலம் பல ஆண்டு காலத்தில் தன்னால் சாதிக்க முடியாமற்போனவற்றை ஆட்சிக்குவந்த சிறிது காலத்துக்குள்ளேயே பிரதமர் ரணில் சாதித்து வருகிறார் என்ற எண்ணமும் -

இந்தப் போக்கில் போய் புலிகளோடு பேச்சுநடத்தி தற்செயலாக ஓர் இணக்கத்தீர்வு ஏற்பட்டுவிட்டால் தனது இருப்பின் நிலை என்னவாகும் என்ற சந்தேகமும் -

அதிகாரங்களை அள்ளிக் குவித்து வைத்திருந்தும் கூடத் தனது 'பாதுகாப்பு' என்பது இன்னமும் கேள்விக்குரியதாகவே இருக்கிறது என்ற பயமும் -

ஜனாதிபதியை உள்ளிருந்து வாட்டத்தொடங்கியிருப்பதை அவரது அண்மைக்காலக் கூற்றுக்கள் வெளிக்காட்டுகின்றன.

'சமாதானம் தொடர்பான இறுதி முடிவை நானே எடுப்பேன்' - என்று ஜனாதிபதி திரும்பத்திரும்பக் கூறுவது இனப்பிரச்சினைக்கு யுத்த வழியிலேயே தீர்வுகாணமுடியும் என்று இன்னமும் கூறிவரும் இனவாதப் பௌத்த தேரர்களையும், ஜே.வி.பி, 'சிஹல உறுமய' போன்ற பேரினவாதச் சக்திகளையும் திருப்திப்படுத்தக்கூடும். ஆனால் சமாதானத்துக்கான ஆணையை வாக்குகள் மூலம் வழங்கிய பெரும்பான்மையின மக்களையும் சிறுபான்மையின மக்களையும் ஜனாதிபதி இதன்மூலம் மகிழ்விக்க முடியாது. மாறாக அவர்களின் வெறுப்பையே சம்பாதித்துக்கொண்டு பதவி இருக்க வேண்டியநிலை ஜனாதிபதிக்கு வரலாம்.

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு ஜனாதிபதிக்கு உள்ள நிறைவேற்று அதிகாரங்களே சிறந்தவை - பொருத்தமானவை - என்று கூறும் குமாரதுங்க, நாட்டின் தேசிய பாதுகாப்பை மட்டுமன்றி, தனது பாதுகாப்பையும் கேள்விக்குள்ளாக்கிவிட்ட தேசிய இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வுகாண எடுக்கப்படும் முயற்சிகளுக்குப் பக்கபலமாகத் தனது அதிகாரங்களைப் பயன்படுத்த முன்வரவேண்டும்.

மாறாக 'குட்டையைக் குழப்பும்' விதமாகக் கருத்துக்களை வெளியிடுவது நாட்டுக்கும் மக்களுக்கும் பேரழிவையே ஏற்படுத்தும் என்பதைக் கூறிவைக்க விரும்புகிறோம்.



மக்கள் வங்கியின் 'ஜயஸ்ரீ' அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் வெற்றிபெற்றோருக்குப் பரிசளிக்கும் வைபவம் அண்மையில் யாழ்.மக்கள் வங்கி கன்னாதிட்டிக் கிளை அலுவலகத்தில் நடைபெற்றது.

மக்கள் வங்கி பிரதேச முகாமையாளர் மு.க.சிவபாதவிருதயர் வெற்றிபெற்ற ஒருவருக்குத் தொலைக்காட்சிப் பெட்டியைப் பரிசளிப்பதைப் படத்தில் காணலாம். (ம-9)

### மீனவர் மறியற்போர் காரணமாக

## உள்ளூராட்சித் தேர்தல் பணிகள் பிரதேச செயலகத்திலிருந்தும் மாற்றம்

மார்ச் மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களை ஏற்கும் பணி நேற்று யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் இருந்து காட்டுக்கந்தோர் ஒழுங்கையில் உள்ள வடக்கு - கிழக்கு மாகாண பிராந்திய ஆணையாளர் அலுவலகத்துக்கு மாற்றப்பட்டது.

யாழ்.செயலகத்தின் முன்பு தொடர்ந்து இடம்பெற்றறுவரும் மீனவர்களின் மறியற் போராட்டம் காரணமாக நேற்றுமுன்தினம் இப்பணி தற்கலிகமாக யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

நேற்று யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தின் முன்பும் மறியற் போராட்டம் இடம்பெற்றதை அடுத்து இப்பணி நேற்று பிராந்திய ஆணையாளர் அலுவலகத்திற்கு மாற்றப்பட்டது.

இந்த அலுவலகத்துக்குப் பொலீஸ் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது. (ம-10-8)

## கொடித் தினம்

யாழ்ப்பாணம்,பெப்.3

மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளும் எதிர்வரும் 8ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதிவரையும் கொடித் தினம் ஒன்றை அனுஷ்டிக்கவுள்ளன.

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும் மற்றும் உறவினர்களின் வீடுகளிலும் தங்கியிருக்கும் மக்களின் சுகாதாரம், முதலுதவி, கல்வி வசதிகளுக்காகவும் பாடசாலைகளில் வீதி ஒழுங்குகளை நடைமுறைப்படுத்துவதற்காகவும் இந்த நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்மாவட்ட கல்வி வலயங்களின் அனுசரணையுடன் பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் இந்தக் கொடித் தினம் அனுஷ்டிக்கப்படும் என்று சங்கத்தின் பிரதிநிதி அறிவித்துள்ளார். (ம-10)

## நாட்டு நடப்பு

### தென்மராட்சி - அன்றும் இன்றும்

அன்று III

பங்குனி மாதம் என்றால்
"பார்வதியாள்" மாதம் என்பர்
அங்குள கோவில் எல்லாம்
அழகுற அலங்கரித்து நிற்பர்
எங்கனும் பஜனை கோஷ்டி
எழில் பெற பவனி செல்லும்
திங்கள்தோறும் ஆடிப் பாடி
திகழ் மட்டுவிலை நண்ணி
அங்கையற் கண்ணி தந்த
அறுவடைக்கு நன்றி சொல்லி
அங்கமர் பன்றித்தலைச்சி அம்மனுக்கு
அலங்கார விழா எடுத்து
பொங்கிய பொங்கல் தன்னை
பூவையர் பகிர்ந்து நல்கி
மங்கையற்கு அரசி தன்னை
மறவாத பக்தர் அம்மா!

*- வீசுடகவி.*

### சங்கங்களுக்கு சீராக வழங்கப்பட்டும்

## மண்எண்ணெய் விநியோகத்தில் குளறுபடி என்று முறைப்பாடு

### மேலதிக அரச அதிபர் கவலை

யாழ்ப்பாணம்,ஜன.3

குடாநாட்டு மக்களுக்கு ஒரு மாதத்துக்கு விநியோகிப்பதற்குத் தேவையான மண்எண்ணெய் ஜனவரி மாத நடுப்பகுதியில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுவிட்டன. ஆனால் ஜனவரி மாதத்துக்கு உரிய மண்எண்ணெயை விநியோகிப்பதில் கூட்டுறவுச் சங்கங்கள் தன்னிச்சையான போக்கில் செயற்படுவதாகக் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

- இவ்வாறு யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் தெரவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் யாழ்.செயலகத்தில் இடம்பெற்ற மண்எண்ணெய் விநியோகம் தொடர்பான கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டதற்கு அமைவாகப் பங்கீட்டு அட்டைக்கு 4 லீற்றர் வழங்கக் கூடியவாறு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் எண்ணெய் வழங்கப்பட்டுவிட்டது. ஆனால் ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களும் இந்தத் தீர்மானத்துக்குக் கட்டுப்படாமல் எதேச்சையாகத் தாம் நினைத்தவாறு மண்எண்ணெய் விநியோகத்தை மேற்கொண்டுவருவதாகப் புகார்கள் கிடைத்துள்ளன.

மாதாமாதம் 4 லீற்றர் பங்கீட்டு அட்டைக்கு வழங்குவதெனவும் - அதற்கான எண்ணெயை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வழங்கும் எனவும் தீர்மானிக்கப்பட்டே புதிய நடைமுறை கொண்டுவரப்பட்டது. அதன்படி பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எண்ணெயை வழங்கியும் வருகிறது.

இவ்வாறான நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் பாரபட்சம் காட்டுவது ஏன்? சகல பங்கீட்டு அட்டைகளுக்கும் உடனடியாக 4 லீற்றர் மண்எண்ணெயை கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கவேண்டும் எனவும் - பெபரவரி மாதம் வழங்குவதற்கான எண்ணெய் விரைவில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-10-08)

## குற்றச்சாட்டுக்கள் ஏதும் இன்றி சிறைகளில் 900 சந்தேகநபர்கள்

குற்றச்சாட்டுக்கள் எதுவும் இல்லாத புலிகள் இயக்க சந்தேக நபர்களின் தொகை சுமார் 900 என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் அனைவரும் வெலிக்கடை, மஹர, போகம்பரை, பதுளை, களுத்துறை ஆகிய சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றனர்.

உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இச்சந்தேக நபர்களைக் குற்றச்சாட்டுக்கள் இன்றி நீண்டகாலம் தடுத்துவைத்திருப்பதன்மூலம் அவர்களின் மனித உரிமைகள் மீறப்படுகிறது என்ற குற்றச்சாட்டு எழலாம் என்றும் அவர் சொன்னார்.

அவர்கள் குறித்து பிரதமரும் பாதுகாப்பு அமைச்சரும் விரைவில் ஒரு தீர்மானம் மேற்கொள்வர் என்று உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சு எதிர்பார்க்கின்றது. (ம)

## மீனவருடன் பேச்சு நடத்த கொழும்பிலிருந்து குழு வரும்?

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ்.செயலகம் முன்பாகக் கடற்றொழிலாளர் சமுகம் நடத்திவரும் மறியற்போராட்டத்தை அடுத்து அது பற்றிக் கலந்துரையாடல் நடத்துவதற்கு விசேட குழுவொன்று கொழும்பிலிருந்து வருகைதரவுள்ளது.

நேற்றுக் காலை இந்த மறியற் போராட்டம் பற்றி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பேசினார்கள்.

இதனை அடுத்து மீனவர்கள் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடல் நடத்துவதற்குத் தான் ஒரு விசேட குழுவை அனுப்பிவைப்பதாகப் பிரதமர் கூறியதாகத் தெரியவருகிறது. (ம-10-8)

## கண்டெடுக்கப்பட்ட அ.அட்டைகள்

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ்.போதனா வைத்தியசாலையில் தவறவிடப்பட்ட இரு அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு வைத்தியசாலைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அவற்றை உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

☆ கந்தசாமி வள்ளியம்மை - 0907023988

☆ சதானந்தன் சிவனேஸ்வரி - 577883270V

ஆகியோரது அடையாள அட்டைகளே கண்டெடுக்கப்பட்டுள்ளன. (ம-8)

### நாளை

தை 22
திங்கட்கிழமை
(04-02-2002)
திதி : ஸப்தமி
பிற்பகல் 1.53 வரை.
நட்சத்திரம் : சுவாதி
முன்னிரவு 9.42 வரை.
தேசிய தினம்
சுபநேரம் : 11.35 - 2.05
ராகுகாலம் : 8.05 - 9.35
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தன் வேலையில் உற்சாகமாக இருப்பவர், வாழ்க்கையில் ஒன்றுக்கும் பயப்படத் தேவையில்லை.


## சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம்

சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடவைத்தல் தற்சமயம் எல்லா நாடுகளிலும் பெருகி வருகின்றது. எம் நாட்டைப் பொறுத்தவரையில் வறுமை, பட்டினி, குடும்ப சூழல், குடிக்கு அடிமையான தகப்பனைக் கொண்ட குடும்பம், மணமுறிவு ஏற்பட்ட குடும்பம் போன்றவை பெரும்பாலும் இதற்குக் காரணமாய் உள்ளது.

இதிலிருந்து சிறுவரைக்
காப்பாற்றுதல்
பாதுகாத்தல்
துஷ்பிரயோகத்தைத் தடுத்தல்
சிகிச்சையளித்தல்
சட்டரீதியான நடவடிக்கை எடுக்க உதவுதல்

போன்ற செயற்றிட்டங்களை யாழ்.மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு நடைமுறைப்படுத்தி வருகின்றது.

- சரவணபவான் சாந்தலிங்கம்
(புனித பத்திரிசியார் கல்லூரி)



உங்கள் தொடர்புகளுக்கான
எங்கள் முகவரி:
மாவட்ட சிறுவர்
பாதுகாப்புக் குழு
அறை எண் - 30
யாழ்.போதனா
வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

- சிறுவர் பாதுகாப்பு (ஐ.இ.) அனுசரணையுடன்
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழுவினரின் வெளியீடு.

(C/20591)

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

பிறப்பு
19
-
05
-
1949



மறைவு
06
-
02
-
1999

### அமரர் சின்னத்துரை கனகரத்தினம்

(காங்கேசன்துறை)
திதி: 03-02-2002

மூண்டதோர் நெஞ்சின் சோகம்
முனைப்புற வளர்ந்து பொங்கி
ஆண்டது மூன்றுமாகி அணைந்திடாத திகமுற்று
தாண்டவமாடும் தன்மை தரித்திடாதோடிப்போக
மாண்டஎம் தந்தையாரே! மாண்புறு அப்பாவே!
நீர் மீண்டுமெம் மடியில் வாரும்
மீகம் பாசத்தின் பதிலாய்ச் சொல்வோம்!

இல.60, பொற்பதி வீதி,
கொக்குவில்.
(215)
பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்.

## 3ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
02
-
08
-
1932



உதிர்வு
05
-
02
-
1999

திருமதி
### அன்னம்மா தனேஸ்வரன்

(இளைப்பாறிய ஆசிரியை, கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்)
திதி: 02.02.2002

தாயே!
உங்கள் நினைவோ! - எங்கள்
கனவிலும் நினைவிலும் இல்லை
எங்கள் உயிரில் அதன் கருவில்
அல்லவா கலந்து இருக்கிறது.
பரசுகம் காணும் தங்களது
பாதக் கமலத்திற்கு
இதய அஞ்சலி செலுத்தும்

தகவல்:
செந்தாமரை (மகள்)
கோண்டாவில்.
(C/20568)
அன்புக் கணவர்,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

அந்தியேட்டி அழைப்பும்
03.02.2002

மலர்வு
30
♦
09
♦
1940



உதிர்வு
04
♦
01
♦
2002

### அமரர் இராமன் பரஞ்சோதி

பாசத்தின் இருப்பிடமே! பண்பின் உறைவிடமே!
நேசத்துடன் எம்மையெல்லாம் வளர்த்தீரையா!
போகம் பல தந்து புகழ்பெற வைத்து விட்டு
வேகமாய் ஏன்தான் எம்மை விட்டுப் பிரிந்தீரோ?
நீங்காது உம் நினைவு நெஞ்சில் நிறைந்திருக்கும்.
ஓம் சாந்தி! சாந்தி!!சாந்தி!!!

எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு ஓடோடிவந்து உதவியவர்கள், அனுதாபம், அஞ்சலி தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன், இன்று (03.02.2002) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வாபுரம்,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.
(181)
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## சங்கக் கடையில் திருட்டு!

யாழ்ப்பாணம்,பெப்.3

கல்வியங்காட்டுப் பகுதியில் உள்ள நல்லூர் ப.நோ.கூ.சங்கக் கடை ஒன்று இரவுவேளை உடைக்கப்பட்டு 25 ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டுள்ளதாகக் கோப்பாய்ப் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கல்வியங்காடு டச்சுவீதியில் உள்ள நல்லூர் ப.நோ.கூ.சங்க முதலாம் இலக்க கடையிலேயே இந்தத் திருட்டுச் சம்பவம் கடந்த வியாழக் கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

சம்பவதினம் இரவு மழை பெய்து கொண்டு இருந்த சமயம் திருடர்கள் சங்கக் கடையின் முன் கதவினை உடைத்தே உட்புகுந்து திருடியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-180-10)

## கடமை தவறும் ஊழியர்கள் மீது கடும் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.3

கடமை ஒழுங்குகளை கடைப்பிடிக்கத் தவறும் மாநகரசபையின் ஊழியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாநகரசபையின் மேயர் செல்லன் கந்தையன் தெரிவித்துள்ளார்.

மாநகரசபையில் கடமை புரியும் ஊழியர்கள் கடமை நேரத்தில் தமது சொந்த வேலைகளில் ஈடுபடல் -

வழங்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றாது கவனயீனமாக இருத்தல் போன்ற செயற்பாடுகள் கண்டுபிடிக்கப்பட்டால் சம்பந்தப்பட்ட ஊழியர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் தயங்கமாட்டேன் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-180)

## நவாலியில் மண் அள்ள தடை விதிப்பு!

நவாலி - கொத்துக்கட்டிப் பகுதியில் மண் அள்ளுவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 5ஆம் திகதிக்கு பின்னர் நவாலி தெற்கு கொத்துக்கட்டிப் பகுதியிலும், ஆனைக்கோட்டை பகுதியிலும் அத்துமீறி மண் அள்ளும் டிராக்டர் உரிமையாளர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பரதேச சபை தலைவர் வெ.அ. ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

மேற்படி பகுதியில் டிராக்டர்கள் அத்துமீறி மண் அள்ளுவது கண்டுபிடிக்கப்பட்டால் அது குறித்து உடனடியாகத் தனக்கு அறிவிக்கும் படி அவர் கேட்டுள்ளார். (ம-185)

## 43 பொலீஸார் திடீர் இடமாற்றம்

43 பொலீஸார் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 3 பேர் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர்கள் என்வும் 3 பேர் உதவிப் பொலீஸ் அத்தியட்சகர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

ஏனையவர்களில் பொலீஸ் தலைமை இன்ஸ்பெக்டர்களும், பொலீஸ் இன்ஸ்பெக்டர்களும் அடங்குவார்கள் என்று பொலீஸ் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

(ஓ-ரி)

## விசமிகளால் கட்டடம் சேதம்

வலி.தென்மேற்கு,பெப்.3

ஆனைக்கோட்டை மகாஜன சனசமூக நிலையம் புனரமைப்புச் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்ட சில நாள்களில் விஷமிகள் சிலரால் கொத்தி சேதப்படுத்தப்பட்டுள்ளது.

விஷமிகள் சிலர் சனசமூக நிலைய நிலப்பகுதியைக் கொத்திச் சேதப்படுத்தியுள்ளனர்.

மேற்படி விடயம் தொடர்பாக சனசமூக நிலைய செயலாளர் சி.அம்பிகைபாலன் மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ம-185)

## நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்கள்

பெரும்பாலான அரச நிறுவனங்கள் நஷ்டத்தில் இயங்கி வருவதாக மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாகீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

பிலியந்தல அஞ்சல் அலுவலகத்தினைத் திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில், இந்த நிறுவனங்கள் தேவைக்கு அதிகமான ஊழியர்களைக் கொண்டிருப்பதே இதற்குப் பிரதான காரணம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ஓ-ரி)


## திருமண மண்டபமும் தங்குமிட வசதியும்

வடபகுதியிலிருந்தும் மற்றும் எந்த நாட்டிலிருந்தும் கொழும்பு செல்லும் பயணிகளுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தி!

VANIY INN லொட்ஜ்

சகலவசதிகளுடன் குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவைபுரியும்
சுத்தமான, பாதுகாப்பான, அமைதியான சூழலில்...
ஒருமுறை விஜயம் செய்து பார்த்தால் உண்மை புரியும்.
No.89, Hinny Appuhamy Mawatha,
Vanrooyan Street, Colombo- 13. T.P.No. 01 433182, 472582.
(95982)


## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
20
☆
04
☆
1946



உதிர்வு
27
☆
01
☆
2000

அமரர்
### சின்னையா பாஸ்கரலிங்கம்

(தபாலதிபர், வவுனியா)
திதி: 03.02.2002

மர்மக் குண்டுவெடிப்பினுக்கு இரையாகி
வவுனியா அஞ்சலகத்தில் மறைந்த எம் மாமணியே!
தர்மகுண பூஷணனே தங்களை இழந்திங்கு
தனியாத் துயர்மூழ்கித் தவிக்கின்றோம் வாருமையா!

அவமிருந்தாய் எமைப்பிரிந்து எங்கோ மறைந்தீர்கள்!
ஆண்டிரண்டு ஆனாலும் ஆறாத்துயரில் அழுந்துகிறோம்
தவமகளிர் தங்களின் முகத்தினிலே நெடுங்காலம்
தாய்நாடு திரும்பிவந்து விழித்திலரே மறைந்தனையோ.

சாளம்பன்,
கரணவாய் மத்தி,
கரவெட்டி.
(126)
தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மூன்றாம் ஆண்டினில்....
## நெஞ்சம் சுமக்கும் நினைவலைகள்

தாயின் மடியில்
24
◊
11
◊
1942



இறைவன் அடியில்
06
◊
02
◊
1999

அமரர்
### சிவஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் விஜயரட்ணக் குருக்கள்

(முன்னாள் பிரதமகுரு, புற்றளை சித்திவிநாயகர் தேவஸ்தானம்,
உபதலைவர், அகில இலங்கை சைவகுருமார் அர்ச்சகர் சபை)
திதி: 03.02.2002

*அற்புத் தந்தையே! எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே!*
*பரம்பரை துலங்க வந்த ஒளிச்சுடரானவரே!*
*அன்பின் உறைவாய் அறிவின் சுடராய்*
*பண்பின் நிறைவாய் பாசத்தின் பிறப்பிடமாய்*
*பூவுலகில் நீங்கள் வாழ்ந்த காலத்தில்*
*அன்பாய் பண்பாய் அறிவாய் நல்ஒழுக்கமாய்*
*சீரும் சிறப்பாகவும் பாங்காக எமை வளர்த்த பாச ஒளியே!*
*எமை ஏங்கவிட்டு தவிக்கவிட்டு எங்கு சென்றீர் ஐயா?*
*ஆண்டுகள் மூன்றல்ல யுகம் மூன்று சென்றாலும்*
*உங்கள் பாதையிலேயே செல்வோம் ஐயா.*
*பரமனருள் பெற்ற நும்மாத்மா சாந்தி பெற*
*புற்றளை சித்தி விநாயகர் பாதக்கமலங்களைப்*
*பற்றி நிற்கின்றோம் ஐயாவே!*

*என்றென்றும் உங்கள் பிரிவால் துயருறும்:*
*தாய்:* சிவபாக்கியம்
*மனைவி:* சந்திரகுமாரி
*மக்கள்:* கீதா, பத்மபபிதா, ஆனந், பிரியா,
சகோதரர்கள், பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*கஜானன் தொலைத் தொடர்பு சேவை,*
*கீதா கோட்டம், புற்றளை பிள்ளையார் கோயிலடி,*
*புலோலி தெற்கு, புலோலி.*
*T.P 070 - 212555*
(165)

# மாணவருக்கு எளிதில் விளங்கும் இலகு நடை பொருளியல் நூல்

இந்நூலின் ஆசிரியர் இந்நூலை எவ்வாறு மாணவர்கள் பயன்படுத்தி அதியுச்சப்பயனை பெறமுடியும் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார். நூலை ஆசிரியர் அவர்கள் உயர்தரப் பொருளியல் கலைத்திட்டத்திற்கு ஏற்ப ஆறு தலைப்புக்களின் கீழ் ஒழுங்கமைத்து எழுதியுள்ளார். முதலில் பொருளாதார வளர்ச்சி என்ற தலைப்பில் அதனுடன் தொடர்புடைய எண்ணக்கரு விளக்கம், அளவிடும் முறைகள், பொருளாதார வளர்ச்சியின் முக்கியத்துவம், பெருளாதார வளர்ச்சிக்கு உதவும் காரணிகள், பொருளாதார வளர்ச்சியை ஒப்பிட்டு நோக்கக்கூடிய குறிகாட்டிகள், பொருளாதார வளர்ச்சியின் காரணமாக பொருளாதாரத்தில் ஏற்படும் மாற்றங்கள் என்பவற்றை சுருக்கமாக ஆறு உப தலைப்புக்களில் ஆராய்ந்து பின்னர் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி பற்றியும், ஏற்படுகின்ற பொருளாதார வளர்ச்சி எத்தகையதாக இருத்தல் வேண்டும் அதாவது வளர்ச்சியின் தரம், பண்பு பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. வளர்ச்சி மட்டும் போதாது வளர்ச்சி சமமாக பல்வேறு பிரிவினர் மத்தியிலும் பங்கிடப்படல் வேண்டும் என்பதும் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டதொன்றாகும்.

**நூல் : பொருளியல்**
**ஆசிரியர்: வே.கருணாகரன்**
B.A.Hons., Dip.in.Edu.

அடுத்ததாக சனத்தொகை என்ற தலைப்பு ஆராயப்பட்டுள்ளது. குடித்தொகையை கணிப்பிடும் முறைகள் எவ்வாறு காரணிகள் சனத்தொகையை நிர்ணயிக்கின்றன என்ற பொதுவான அம்சங்களை எடுத்து விளக்கி இலங்கையின் சனத் தொகையின் வளர்ச்சி சனத்தொகை வயதமைப்பில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள். சனத்தொகை அடர்த்தி, சனத்தொகை எறியம் என்னும் விடயங்கள் ஆராயப்பட்டுள்ளன. 2041 ஆண்டு வரையிலான சனத்தொகை எதிர்வு கூறலும், இலங்கையின் அண்மைக்கால புள்ளிவிபரங்களும் இந்தப் பகுதிக்கு மேலும் மெருகூட்டுகின்றன. மூன்றாவதாக ஊழியப்படை தொடர்பான பல்வேறு எண்ணக்கருக்களுக்கும் விளக்கமளித்து கணிப்பிடும் முறையும் விளக்கப்பட்டுள்ளது. அடுத்து மூன்று தலைப்புக்களும் இந்த மூன்றாவது தலைப்போடு நெருங்கிய தொடர்புடையவை. அவை யாவன முறையே வேலை வாய்ப்பு, வேலையின்மை, கீழுழைப்பு என்பவை யாகும். இத்தலைப்புக்களில் தொழில் வாய்ப்பு என்ற எண்ணக்கருவை விளககி கணிப்பிடுமுறையும், வகைகளும் விளக்கப்பட்டுள்ளது. அத்துடன் உள்நாட்டு, வெளிநாட்டு வேலை



**இ.நந்தகுமாரன்,**
**பீடாதிபதி/வியாபார கற்கைகள் பீடம்,**
**வவுனியா வளாகம்,**
**வவுனியா.**

வாய்ப்புக்கள் பற்றியும் ஆராயப்பட்டுளளது. வேலையின்மை என்ற பகுதியில் வேலையின்மை வீதம், வேலையின்மை வகைகள், அவற்றிற்கான காரணங்கள், வேலையின்மை பற்றிய தரவுகள் பெறும் வழிமுறைகள், பொருளாதார விளைவுகள் இலங்கையின் வேலையின்மைப் பிரச்சினைகள் என்பன ஆராயப்பட்டுள்ளது.

அடுத்ததாக கீழுழைப்பு என்ற தலைப்பில் "கீழுழைப்பு" என்ற எண்ணக்கருவை விளக்கி வேலையின்மைக்கும் கீழுழைப்புக்குமிடையில் உள்ள வேறுபாடு அட்டவணையிடப்பட்டுள்ளது. மேலும் இலங்கையில் ஏன் கீழுழைப்பு உயர்வாக இருக்கிறது; இதனுடைய பொருளாதார விளைவுகள் எவை, கீழுழைப்பு வீதத்தினை எப்படி அளவிடுவது என்பதுடன் இலங்கையில் கீழுழைப்பு வீதத்தின் போக்கும் ஆராயப்பட்டுள்ளது.

இந்நூலில் இத்தனை விடயங்களும் எடுத்தாளப்பட்ட போதிலும் அவை மிக இரத்தினச்சுருக்கமாக மாணவர்கள் தாமாகவே விளங்கிக் கொள்ள கூடிய வகையில் எளிய நடையில் எடுத்தியம்பப்பட்டுள்ளது. ஆசிரியரின் வகுப்பறைக் கற்பித்தலின் அனுபவத்தையும் தொடர்ச்சியான பொதுப் பரீட்சை வினாத்தாள் திருத்தும் பணியில் ஈடுபட்டுவரும் அனுபவத்தையும் எடுத்துக்காட்டுகிறது. தறபோது க.பொ.த. உயர்தர பரீட்சைகளில் கேட்கப்படும் வினாக்களுக்கு அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் விடைகள் எந்த வகையில் இருக்க வேண்டுமோ அந்த வடிவத்திலேயே விளக்கமளிக்கப்பட்டிருப்பது மாணவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும். மாணவர்கள் கற்ற விடயங்களை மீட்டு தமது நம்பிக்கையை உயர்த்திக் கொள்ளும்வண்ணம் ஒவ்வொரு தலைப்பின் கீழும் கடந்தகால பரீட்சை வினாக்களைச் சேர்த்து இருப்பதுடன் அவற்றில் சிலவற்றிற்கு விடைகளை வழங்கி வேறு சில வினாக்களுக்கு மாணவர்களை விடையளிக்க தூண்டி இருப்பதும் மாணவர்களை தேடல் முயற்சியில் இறக்க ஆசிரியர் முயன்றிருப்பதும் தெரிகின்றது. ☆

---

## பிந்துனுவெவ படுகொலைகள்:

# முகாம் பொறுப்பதிகாரி மற்றும் நாற்பது படையினர் மீது வழக்கு

கொழும்பு,பெப்.3

பிந்துனுவெவ தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் வெட்டியும், சுட்டும், எரித்தும் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக முகாம் பொறுப்பதிகாரி மற்றும் 40 படையினர் மீது சட்டமா அதிபர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த வழக்கை விசாரணை செயவதற்கு நீதியரசர்களான சரத் அமபேபிட்டிய, ஹிக் பஸ்நாயக்க, உபாலி அபயரத்ன ஆகியோர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பிந்துனுவெவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகளை 2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 10திகதி தாக்கியும், வெட்டியும் கொலை செய்ததாக இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் 21 தமிழ்க் கைதிகள் கொலை செய்யப்பட்டதும், 14பேர் காயமடைந்ததும் தெரிநததே. (ஐ-3-ரி)

---

# ஆங்கில அறிவு இல்லையெனில் இனி அரச வேலை கிடைக்காது!

## பேராசிரியர் குமாரவடிவேல் உரை

யாழ்ப்பாணம்,பெப்.3

அரசுக் கொள்கைகளின் அடிப்படையில் ஆங்கில அறிவு இல்லாது எதிர்காலத்தில் அரசு வேலைவாய்ப்புகளை இளைய தலைமுறை எதிர்பார்க்கமுடியாது.

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல் இவ்வாறு தெரிவித்தார்.

விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத்தின் சமூக அறிவியல் கலை, இலக்கிய இதழான 'சக்கரம்' சஞ்சிகை வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பேராசிரியர் மேலும் தனதுரையில் தெரிவித்ததாவது:-

இன்று உலகளவில் மாணவர்கள் ஆஙகில அறிவில் உயர்ந்தே உள்ளனர். இதனால் யாழ்.பல்கலைக்கழகத்திலும் தமிழ் மொழியோடு ஆங்கில மொழியையும் கட்டாயமாக்கியுள்ளோம்.

ஆகவே பல்கலைக்கழகம் புகுமுக மாணவர்கள் ஆங்கிலத்தைப் பிரதானமாகப் படிக்கவேண்டும்.

பிற நாடுகளில் உள்ள பல்கலைக்கழக மாணவர்கள் அவர்களுடைய தாய்மொழியுடன் ஆங்கிலம் உட்பட நான்கு, ஐந்து மொழிகளில் பேசும் திறமையை வளர்த்துள்ளனர். நாம் தமிழ் மொழியோடு குறைந்தது ஆங்கில மொழியையாவது பேச வேண்டாமா?

- இவ்வாறு கூறினார் பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல். விஞ்ஞான பீட மாணவ ஒன்றியத் தலைவர் எஸ்.பொன்திவாகரன் தலைமையில் நடந்த மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட துணைவேந்தர் பொ.பாலசுந்தரம் பிள்ளை 'சக்கரம்' சஞ்சிகையை வெளியிட்டுவைத்தார். முதற் பிரதியை தாவரவியற்றுறைத் தலைவர் திருமதி என்.ரவிமன்னா பெற்றுக்கொண்டார். சஞ்சிகை குறித்த நயப்புரையை யாழ்.இந்துக்கல்லூரி முன்னாள் உப அதிபர் எஸ்.சிவராமலிங்கம் நிகழ்த்தினார். (ம-180)



யாழ்.மாநகரசபை மேயராகப் பொறுப்பேற்றுள்ள செல்லன் கந்தையனுக்கு அண்மையில் யாழ்.ஜனசக்தி சனசமூக நிலையத்தினர் வரவேற்பளித்தனர். நிகழ்வில் க.சுந்தரலிங்கம் உரையாற்றுவதையும் யாழ். மேயர், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட துணைத் தலைவர் வி.ஆனந்தசங்கரி ஆகியார் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

---

# மனித வாழ்வின் பெறுமதியை உணர்ந்து மனச்சாட்சியின்படி வாழப்பழகுங்கள்

**இ.ராஜன்**
**இளவாலை**

இன்றைய மனிதன் பல்வேறு வளர்ச்சிப் படிகளில் உயர்ந்து சென்றாலும் அவன் உள்ளார்ந்த - நேர்மையான - மனச்சான்றுடன் வளர்ந்து வருகின்றானா என்பது சமுதாயத்தில் வாழும் ஒவ்வொருவரும் தமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து கேட்க வேண்டிய முக்கிய வினாவாக அமைகிறது. இறைவார்த்தையை நாம் எடுத்து நோக்கில் இளைஞன் ஒருவன இயேசுவிடம் "நல்ல போதகரே, நிலைவாழ்வை உரிமையாக்கிக்கொள்ள நான் என்ன செய்யவேண்டும்?" என்று கேட்கின்றார். மீட்பர் அவனிடம் "கடவுள் ஒருவரைத் தவிர நல்லவர் எவருமில்லை எனினும்; கொலை செய்யாதே, விபசாரம் செய்யாதே, களவு செய்யாதே, பொய்ச்சான்று சொல்லாதே, வஞ்சித்துப் பறிக்காதே, உன் தாய், தந்தையை மதித்து நட" (மாற்:10:17-19) என உலகவாழ்வில் நேர்மையோடு வாழவேண்டிய வாழ்க்கை முறைகளை அழகுற எடுத்துக் காட்டுகின்றார். இந்நெறிமுறைகள் இன்றைய எமது சமுதாயத்திற்கும் அவசியமானவையாகும்.

இறைவன் மட்டுமே நல்லவர்; அவரே மனித வாழ்விற்குத் தேவையான, நேர்மையான, திட்டவட்டமான பெறுமதிகளைத் தருபவர். அவர் மட்டுமே எல்லா மதிப்பீடுகளுக்கும் ஊற்றாகவும் உறைவிடமாகவும் விளங்குபவர். இறைவனில் மட்டுமே நமது மதிப்பீடுகள் நம்பகத் தன்மையையும், திட்டவட்டமான உறுதிப்பாட்டையும் பெறுகின்றன. அவரில்லாமல் அவரிடம் நாம் திரும்பாமல் உருவாக்கப்பட்ட மதிப்பீடுகளைக் கொண்ட உலகம் வெறுமையானது. தன்னைத் தெளிவாக, நேர்மையுடன் வெளிப்படுத்தும் தன்மையை இழந்து விடுகிறது. தீமையை நன்மையாக முன்வைக்கும்போது நன்மையே மறுக்கப்படுகிறது.

இன்றைய நிலையில் நமது சொந்த வாழ்க்கை அனுபவமும் இதனையே நமக்கு வெளிப்படுத்துகின்றது அல்லவா? எமது மதிப்பீடுகள், கணிப்புக்கள், நடவடிக்கைகள் என்ற எல்லைகளிலிருந்து இறைவன் அப்புறப் படுத்தப்பட்டுள்ளார்.

எனவேதான் இளைஞனுடன் இறைமகன் நிகழ்த்திய உரையாடலில் கட்டளைகளை எடுத்துரைக்கின்றார். நேர்மையான மனச்சான்றின்படி வாழ அழைப்பு விடுக்கின்றார் அவர். ஏனெனில் நேர்மையான மனச்சான்றே மனிதத்துவத்தின் செயல்களுக்கேற்ப மனிதனுள் செயற்படுகின்றது. அது மனிதனைக் கண்டிக்கிறது அல்லது மன்னிக்கிறது. எனவே, மனச்சான்றைத் திரிபுபடுத்துதல் கூடாது. ஒழுக்கநெறியின் அடிப்படைக் கொள்கைகளின் அமைப்பானது எவ்வித தீய சக்திகளுக்கும் சரணடையக்கூடாது.

அன்பார்ந்தவர்களே, நற்செய்தியில் கிறிஸ்து தன்னிடம் கேள்வி எழுப்பியவனுக்குக் கொடுத்த பதில் இன்று எமக்கு தரப்பட்டதாகிறது. இன்றைய எமது சமுதாய நிலையில் கிறிஸ்து எமது ஒழுக்கநெறி அறிவு பற்றியும், மனச்சான்றின் நிலை பற்றியும் வினவுகின்றார். நன்மை, தீமை என்னும் ஒழுக்கநெறி சார்ந்தவற்றோடு தொடர்புபட்டு எமது வாழ்க்கைமுறையை ஆழமாகச் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். எமது வாழ்வின் பெறுமதியானது மனச்சான்றின் உண்மையிலும், நீதியிலும், நேர்மையிலும் முக்கியமாகத் தங்கியுள்ளது.

**ஞாயிறு நற்பிரசாதம்**

ஆகவே மனிதன் தன் வாழ்வின் முழு நிறைவை அடையவேண்டுமெனில் ஒவ்வொரு நிலையிலும் மனிதனுக்கே உரித்தான நேர்மையான மனச்சான்றுடன் வாழ்ந்து முடிவில்லா இன்பப் பேற்றை அடையலாம். இந்நிலைக்கு எம் அனைவரையும் தயாராக்க உறுதி பூணுவோம். ✷

---

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு செல்வதில் உள்ள சிரமத்தை நீக்குக

## சம்பந்தன் கோரிக்கை

திருமலை,பெப்.3

மூதூரில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு மக்கள் சென்று வருவதில் பெரும் சிரமம் இருப்பதால், அதனை நீக்கி மக்களின் போக்குவரத்திற்கு வகை செய்யுமாறு திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சம்பந்தன் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் சமாதானச் சூழல் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் இந்த வேளையில், மேற்படி போக்குவரத்திற்கு வகை செய்துகொடுப்பது முன மாதிரியான செயற்பாடாக அமையும் என்றும் -

மூதூர்ப் பகுதியில் உள்ள சேனையூர், சந்தூர், கட்டைபறிச்சான் ஆகிய விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள மக்கள் அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச்செல்லவும் வசதி செய்து கொடுக்கப்படுதல் வேண்டும் என்றும் - அவர் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன் சமாதான சூழல் ஏற்பட்டுள்ள இந்தவேளையில், இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கும இடையே சென்றுவரும் மக்களைத் தடுப்பதும் சோதனை மற்றும், அத்தியாவசியப் பொருள்கள் மீது தடைவிதிப்பதும் மக்களுக்கு சமாதான முயற்சிகள் மீது அவநம்பிக்கையை ஏற்படுத்தும் செயலாக அமையும் என்றும் சம்பந்தன் மேலும் குறிப்பிட்டார். (ஒ-ரி)

---

# உடுவில் வைத்தியசாலைக்கு நிரந்தர டாக்டரை நியமிக்குக!

## சுகாதாரப் பணிப்பாளரிடம் கோரிக்கை

சண்டிலிப்பாய்,பெப்.3

உடுவில் அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தர டாக்டர் ஒருவரை நியமித்து நோயாளர்கள் சிரமமின்றி சிகிச்சை பெற உதவுமாறு உடுவில் பகுதியில் உள்ள பொது அமைப்புகள் யாழ்.சுகாதாரசேவை பிரதி மாகாணப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் கோரிக்கை விடுத்துள்ளன.

இந்த வைத்தியசாலையில் கடந்த பலவருடகாலமாக பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிவந்த டாக்டர், கடந்த மாதம் பதவியிருந்து ஓய்வு பெற்றார். இதனை அடுத்து அளவெட்டி அரசினர் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியான டாக்டரே தற்போது இந்த வைத்தியசாலையின் பதில் பொறுப்பதிகாரியாகவும் சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளரினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முற்பகலில் அளவெட்டி அரசினர் வைத்தியாலையில் கடமையாற்றிவிட்டு பிற்பகலில் உடுவில் அரசினர் வைத்தியாசாலைக்குச் சென்று அங்கு நோயாளர்களுக்குச் சிகிச்சையை வழங்கிவருகின்றார்.

பிற்பகல் மட்டும் இங்கு சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் நோயாளர்கள் தமக்கான சிகிச்சையை உரியமுறைப்படி பெறமுடியாது பாதிப்படைந்துள்ளனர்.

ஆகவே இவ் வைத்திசாலைக்கு முழுநாளும் பணிபுரியக்கூடிய வகையில் நிரந்தர வைத்தியபொறுப்பதிகாரி ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

- இப்படி இந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-135)

---

# நினைவு தினம்

யாழ்ப்பாணம்,பெப்.3

தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஸ்தாபகத் தலைவர்களில் ஒருவரான சட்டமா மேதை ஜீ.ஜீ.பொன்னம்பலத்தின் 25 ஆவது நினைவு தினம் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் தமிழர் விடுதலைக் கூட்டணி யாழ். தலைமைச் செயலகத்தில் நடைபெறும். (ம)

# தெற்கில் பல்கலைக்கழக மாணவர்கள் சமாதானத்துக்கு எதிராகப் போர்க்கொடி!

இனப்பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளுக்கு எதிராக நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்களை நடத்தப் போவதாக தென்னிலங்கை பல்கலைக்கழக மாணவர்கள் அறிவித்துள்ளனர்.

சில பல்கலைக்கழக மாணவர் அமைப்புகள் இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் குறித்து ஆராய்ந்து வருகின்றன என்றும் -

அடுத்துவரும் நாள்களில் இந்த ஆர்ப்பாட்டங்கள் நடைபெறலாம் என்றும் -

சம்பந்தப்பட்ட மாணவர்கள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

விடுதலைப் புலிகள் தங்களை ஆயுதரீதியில் பலப்படுத்தவே தற்போது சமாதானப் பேச்சுகளுக்கு முன்வந்துள்ளனர் என்று தென்பகுதி பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் தலைவர் சாமிர கொஸ்வத்த தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சிகளுக்கு எதிராக ஜே.வி.பி. எதிர்ப்புப் போராட்டங்களை நடத்திவரும் நிலையில் பல்கலைக்கழக மாணவர்களும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-7)

நீங்கள் பலாலி யாழ்.சேவையில் விளம்பரம் செய்வதற்கு விரும்புகிறீர்களா?

☆ பிறந்த நாள் ☆ வர்த்தக விளம்பரம் ☆ மரண அறிவித்தல்
எதுவானாலும் எமக்குப் போன் செய்யுங்கள்.

மூர்த்தி அட்வர்டைஸிங், சேர்விஸ்
114/19, நாவலர் வீதி, (தேவி அச்சக ஒழுங்கை),
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 2789. (256)

## யாழ்.கலட்டி வண்ணை கிழக்கு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி ஆலயத்தின் வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம் (மகாசபை) மாசி மாதம் 3ஆம் திகதி இன்று (03-02-2002) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆலய முன்மண்டபத்தில் நடைபெறும் அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

(246) - ஆலய பரிபாலன சபை.

மீண்டும் ஜோ. எகட்டன்
செனித் மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம் ஸ்தாபனத்தின்
விநியோகத்தில் 70 வருட பழமைவாய்ந்த
தோலகட்டித் தயாரிப்புகள்:
தோலகட்டி நெல்லி ரசம், முந்திரிகை ரசம்
வியாபார விசாரணைகள் வரவேற்கப்படுகின்றன.
சந்தைப்படுத்துவோர்:
ஜோ.எகட்டன்
செனித் மார்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ்,
19/3, கண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை,கண்டுக்குளி, யாழ்ப்பாணம். (239)

## ஈழ அகதிகள் தாயகம் திரும்ப விருப்பம்!

கொழும்பு,பெப்.3

தமிழகத்துக்கு அகதிகளாகச் சென்றவர்களில் சுமார் 4 ஆயிரம் குடும்பங்கள் நாடுதிரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று கடற்றொழில் பிரதி அமைச்சர் மொகிதீன் அப்துல்காதர் தெரிவித்திருக்கிறார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள மோதல்தவிர்ப்பு காரணமாகவும் தமிழர்வாழ்வில் இயல்புநிலை உருவாகும் என்ற நம்பிக்கையினாலும்-அகதிகள் நாடுதிரும்ப விரும்புகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் சுமார் ஒரு லட்சம் இலங்கைத் தமிழர்கள் முகாம்களிலும், நண்பர்கள் வீடுகளிலும் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.(ஐ-3-ரி)

## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம்,பெப்.3

கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்க கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றத்தின் சார்பில் பன்னிரு எழுத்தாளர்களின் 'இங்கிருந்து.....' சிறுகதைத் தொகுதி நூல் அறிமுக விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறும்.

நூல் அறிமுகவுரையை மாணிக்கவாசகர் வித்தியாலய அதிபர் இ. இராகவன் நிகழ்த்துவார். ஆய்வுரைகளை தேவரையாளி இந்துக்கல்லூரி உப அதிபர் க.நடேசு(தெணியான்), நெல்லியடி ம.ம.வித்தியாலய ஆசிரியர் ஐ.சண்முகலிங்கன், விக்னேஸ்வரக் கல்லூரி ஆசிரியை ந.கல்யாணி ஆகியோர் நிகழ்த்துவர். (ம)

ஜோ.எகட்டனின்
ஜெசித்தாராவின்
இன்றைய ஸ்பெஷல் கோழிப் புரியாணி
சிலி சிக்கனுடன் ரூபா 150/= மட்டுமே
வழமையான உணவுப் பொதிகளும் உண்டு.
உணவு நேரம் நண்பகல் 12.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை.
ஜோ.எகட்டனின்
ஜெசித்தாரா உங்கள் விருந்தகம்
19/3, கண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, கண்டுக்குளி, யாழ்ப்பாணம். (240)
நவயுகத்தின் நவநாயகி ஜெசித்தாரா!
சுவையின் மறுநாமம் ஜெசித்தாரா!!

# 41ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 17 - 05 - 1950



மறைவு 25 - 12 - 2001

## திருமதி சிவசுந்தரலிங்கம் விமலாதேவி

(குஞ்சுமணி)

திதி: பூர்வபக்க தசமி 03.02.2002

உள்ளத்தால் பொய்யாதொழுகி
உலகத்தார் உள்ளத்திலெல்லாம்
உளராக வாழ்ந்த குடும்பத் திலகமே!
அழகுத் திருமுகமும் அன்பும் பண்பும்
கலந்த வார்த்தைகளும் எண்ணில்
அடங்காதவை. எம் விழிநீர் தாங்காத
வேதனையில் தாளாமல் தவிக்கின்றோம் நாமிங்கு.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஞானவைரவர் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.


கணவர், மகள், பெற்றோர், சகோதரர்கள், மைத்துனர்கள், மருமக்கள், உற்றார், உறவினர்கள். (219)

# A LIFE OF DEDICATION

# 31ST DAY REMEMBRANCE OF LATE

# MR.ARUMUGAM MAHADEVAN

(Lecturer, Palay Teachers' College,Thirunelvely.)



Life is not how long one lives
But how he lives.
Life is not one's life time
But his life style or pattern of living.
You were born as a MAN
Lived as a MAN
And died as a MAN -
An embodiment of
Morality, Adaptability and
Non violence.

**Born** 19-10-1947 **Called to Rest** 02-01-2002

விரிவுரையாளர்களின் பற்றாக்குறையால் கல்வித்தத்துவத்தின் அரிச்சுவடியே அறிய முடியாது நாம் திணறிக் கொண்டிருந்தவேளை மனமுவந்து, தானாக முன்வந்து எமக்கு அத்தத்துவத்தை ஊட்டிய வேதியல் சாஸ்திர நிபுணரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

2nd year Students (English Course)
**Palaly Teachers' College**

(230)

# தடைகள், கெடுபிடிகள் நீங்காதவரை சமாதானப் பேச்சுகள் சாத்தியமில்லை

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.3

தமிழ் மக்கள் மீதான தடைகள், கெடுபிடிகள் நீக்கப்பட்டு இயல்பு நிலை ஏற்படுத்தப்படாதவரை சமாதானப் பேச்சு சாத்தியமற்றதாகவே இருக்கும்.

மீனவர்களின் மறியற்போராட்டம் தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கடந்த 10வருடங்களுக்கு மேலாக அமுல்படுத்தப்பட்டுவரும் கடல் வலயத் தடைச் சட்டத்தினை நீக்கி, சுதந்திரமாகத் தொழில்செய்ய அனுமதிக்கும்படி கோரி யாழ்மாவட்ட மீனவர் சங்கங்களினால் நடத்தப்பட்டு வரும் மறியற்போராட்டம் இன்னமும் ஒரு முடிவுமின்றி தொடர்கின்றது.

புதிதாகப் பதவிக்கு வந்த அரசும் தொழிலாளர்களின் போராட்டத்திற்கு எதுவிதமான பதிலையும் கூறாது இழுத்தடித்து வருகின்றது. உண்மையில் தமிழ் மக்களின் நலனில் அக்கறையுள்ள ஓர் அரசாக இருந்திருந்தால் - தொடரும் யுத்தத்திற்கு அரசியல் பேச்சுகள் மூலம் தீர்வுகாண விரும்புகின்ற ஓர் அரசாக இருந்திருந்தால் - மீனவர்களது போராட்டத்திற்கு சாதகமான பதிலை அளிக்க முடியும். இலங்கையில் தொடரும் யுத்தத்திற்கு பேச்சுகள் மூலம் தீர்வு காணப்படவேண்டுமாயின் புலிகளுடன் பேச்சுகள் ஆரம்பிக்கப்படவேண்டும். அதற்காகப் புலிகள் மீதான தடை நீக்கப்படவேண்டும். வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்கள் மீதான தடைகள், கெடுபிடிகள் நீக்கப்பட்டு வடக்கு - கிழக்கு பகுதிகளில் இயல்பு நிலை ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது தமிழர் தரப்பினால் வலியுறுத்தப்பட்டுவரும் விடயங்கள் ஆகும். இருந்தும், இன்னமும் கடல் வலயத் தடையை நீக்க அரசு பின்னடிப்பது தமிழ் மக்கள் மத்தியில் சமாதானம் தொடர்பாக பெருஞ்சந்தேகத்தினையே ஏற்படுத்தி வருகின்றது. மக்கள் மீதான இவ்வாறான தடைகள், கெடுபிடிகள் நீக்கப்பட்டு இயல்பு நிலை ஏற்படுத்தப்படாதவரை பேச்சுவார்த்தை என்பது சாத்தியமற்றதாகவே இருக்கும்.

நாட்டின் இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுகள் மூலம் தீர்வு காண்பதற்குக் கிடைத்துள்ள இறுதிச் சந்தர்ப்பத்தினை அரசு சரியாகப் பயன்படுத்தவேண்டும். அதற்கேற்ற வகையில் கடல் வலயத் தடை நீக்கமும் முக்கியமான ஒரு விடயம் என்பதால் அரசு அதனை சாதகமாகப் பரிசீலிக்கவேண்டும். சாதகமான பதில் கிடைக்கும்வரை தொடரும் மீனவர் போராட்டத்திற்கு எமது முழுமையான ஆதரவு கிடைக்கும். அத்துடன், எதிர்வரும் 4ஆம் திகதி சுதந்திர தினத்தன்று பல்கலைக்கழகத்திலும் கறுப்புக்கொடி பறக்கவிடப்படும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,பெப்.3

அளவெட்டி அளிஞ்சிலம்பதி விநாயகர் ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தி விழாவும், சகஸ்ர சங்காபிஷேகமும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளன.

சமயச் சொற்பொழிவு, வில்லிசை, என்பன சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம் பெறும். (ஐ-7-135)

★ ★ ★

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை மணவாளக் கோலவிழா நடைபெறவுள்ளது.

சங்காபிஷேகம், சமயச் சொற்பொழிவு, இன்னிசை விருந்து, திருவூஞ்சல் என்பன சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம்பெறவுள்ளன. (ஐ-7)

★ ★ ★

காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள் இன்று காலை 7மணி தொடக்கம் இடம்பெறவுள்ளன. (ஐ-73)

## சமாதானம் ஏற்பட இறையாசி வேண்டி விசேட வழிபாடு

யாழ்ப்பாணம்,பெப்.3

புலிகள் மீதான தடையை நீக்கி பேச்சுக்களை முன்னெடுக்க இறையருள் வேண்டி இன்று மாலை 5மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரி வளாகத்தில் விசேட வழிபாடு ஒன்று நடத்தப்படவுள்ளது.

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, கிறிஸ்தவ இறையியல் கல்லூரி ஆகியவற்றின் ஏற்பாட்டில் இந்த வழிபாடு நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பான மகஜர் ஒன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## இறுதியாட்டம் இன்று நடைபெறாது!

யாழ்ப்பாணம்,பெப்.3

இன்று கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருந்த விக்ரம் - ராஜன் - கங்கு ஞாபகார்த்த கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் காலநிலை சீரின்மை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆட்டம் நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறுமென கழகச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இறுதிச் சுற்றில் யாழ்.பல்கலைக்கழக அணியும், ஜொலிஸ்ரார் அணியும் விளையாடும். (ஐ-9)

# சூறாவளி அபாயம் இல்லை; கடற்கொந்தளிப்பு தொடரும்!

கொழும்பு,பெப்.3

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் சூறாவளியாக மாறாது என்றும் ஆயினும் கடற்பரப்பில் கொந்தளிப்பு நிலை தொடர்ந்து காணப்படும் என்பதால் மீனவர்கள் கடலுக்குச் செல்ல வேண்டாம் என்றும் மட்டக்களப்பு வளிமண்டல அவதானிப்பு நிலையம் அறிவித்துள்ளது.

கடந்த சில தினங்களாக மட்டக்களப்பில் தொடர்ந்து பெய்துவரும் அடைமழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயப் பயிர்களும் அழிவடைந்துள்ளன.

இதேவேளை -

மட்டக்களப்பு நகரில் சூறாவளி அபாயம் குறித்து கடந்த வியாழக்கிழமை பொலீஸார் ஒலிபெருக்கி மூலம் பொதுமக்களுக்கு எச்சரிக்கை அறிவிப்பு வெளியிட்டிருந்ததாக கூறப்படுகின்றது. (ஐ-6)


## 5ஆம் ஆண்டு நினைவு



மண்ணில் 02 - 09 - 1947

விண்ணில் 03 - 02 - 1997

திருமதி
**கபிரியல்பிள்ளை மேரிகிளாறா**

நீங்கள் மறைந்தாலும் உங்கள் நினைவு
எங்கள் உள்ளத்தை விட்டு அகலவில்லை
தினமும் உங்கள் நினைவில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்
உங்கள் ஆத்மசாந்திக்காகத் தினமும் இறைவனிடம்
மன்றாடி வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
மருமகன், மக்கள்,
பேரப்பிள்ளைகள்.

40,5 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம். (280)

## 31ஆவது நாள் நினைவஞ்சலி



எமது கல்வி நிறுவனத்தின்
இரசாயனவியல் வித்தகர்
அமரர்
**ஆறுமுகம் மகாதேவன்**
(B.Sc., Dip. in Edu., S.L.E.A.S.)

அவர்களின் நினைவாக இன்று (03.02.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நிகழும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை, மதியபோசனத்தில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிர்வாகம்,
NEW SCIENCE HALL,
NEW SCIENCE COLLEGE.
(281)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு 30 - 05 - 1930

உதிர்வு 03 - 02 - 2001

**அமரர் சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை**

எம் அன்புத் தெய்வமே!
ஓராண்டு கழிந்தால் என்ன?
ஒரு யுகம்தான் சென்றால் என்ன?
நீர் எமக்கு அணையாத தீபமன்றோ!
மீளாத் துயில்கொண்டு எம்மை ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டுச் சென்ற அன்புத் தெய்வமே!
பண்பின் உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
அன்புடனே அரவணைத்து அணையாது
ஒளிவிட்ட தீபமன்றோ!
வேதனையோ தீரவில்லை
எம் மங்காப் பெரும் செல்வமே!
உங்கள் பாசமிகு நினைவுகளை நினைத்து
தினந்தினம் துடியாய்த் துடித்துக் கலங்குகின்றோம்
அன்பெனும் தெய்வமே!

என்றும் நீங்கா நினைவுகளுடன்
*மனைவி, மக்கள்,*
*மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்.*

*உயரப்புலம்,*
*ஆனைக்கோட்டை.* (277)

## துயர் பகிர்கின்றோம்

எமது ஆலயத்தின் இராஜகோபுரத்தையும்,
பஞ்சமுகவிநாயகர் - மகாலட்சுமி - கிருஷ்ணர் ஆகிய உற்சவமூர்த்திகளையும்
தம் கைவண்ணத்தால் அழகுற வடிவமைத்துத்தந்த கலைப்பொக்கிஷம்

**நாகலிங்கம் சோமசுந்தரம் ஸ்தபதி**

அவர்கள் இறையடி சேர்ந்தமையை அறிந்து பெரும் அதிர்ச்சியடைந்தோம். பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை,
கோண்டாவில் கிழக்கு ஆசிமட
அரசடி விநாயகர் ஆலயம்.
(271)

**SHAMROCK**
J/ஈச்சமோட்டை வீதி.
☆ GR.③ முதல் O/L வரை
☆ புலமைப் பரிசில் (GR.5)
**A/L 2004**
★கலை, வர்த்தக, கணித,
விஞ்ஞான பிரிவுகள்
(C/20595) ஆரம்பமாகியுள்ளன.

**ராஜா** யாழ்ப்பாணம்
கமலஹாசன், சிம்ரன்,
ஸ்நேகா, அப்பாஸ்
நடிப்பில்
**பம்மல் K சம்பந்தம்**
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு: 10.30, 2, 5 (பு.நே.)
(C/20571)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
3ஆம் திகதிவரை
சரத்குமார், மீனா நடித்த
**ரிஷி**
தினசரி: 11.00, 2.30, 5.30 (புதிய நேரம்)
(C/20572)



**நாகம்ஸ்** சுன்னாகம்
விஜய், பூமிகா,
மோனல்,
விவேக் நடித்த
**பத்ரி** (ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 3.00 (புதியநேரம்) (274)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னத்தம்பி சிவகாமிப்பிள்ளை (சின்னமணி)

ஆனைக்கோட்டை, உயரப்புலத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி சிவகாமிப்பிள்ளை(சின்னமணி) நேற்று (02-02-2002) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி (வைத்தியர்) அவர்களின் அன்பு மனைவியும் தனபாலசிங்கம், சீதாலட்சுமி, புவனேஸ்வரி, தர்மகுலசிங்கம் (லண்டன்), காலஞ்சென்ற தனபாக்கியலட்சுமி ஆகியோரின் அன்புத் தாயாரும் புலேந்திரன் (ஹொலண்ட்), சுகுமார் (குகன் ஸ்ரோர்ஸ்), கிறிஸ்யா (லண்டன்), ரட்னேஸ்வரன் (கொழும்பு), காலஞ்சென்ற இராசலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியும் சிவநந்தினி, தர்மேந்திரா, (முகாமைத்துவம், 2ஆம் வருட மாணவன், யாழ்.பல்கலைக்கழகம்), நிருஜா, தாசனா, வித்தியா, நிருஜன், அகிலன் (கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள்), ஆஷா (உடுவில் மகளிர் கல்லூரி மாணவி), டாவிதன், திவாகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03-02-2002) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரையாம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
தனபாலசிங்கம் *(மகன்)*,
பு.சீதாலட்சுமி *(மகள்)*.

*உயரப்புலம், ஆனைக்கோட்டை.* (276)

### நடராசா ஆனந்தகுமாரசாமி (கனி)

(புவியியலாளர், மலேசியா)

மலேசியாவைச் சேர்ந்த நடராசா ஆனந்தகுமாரசாமி (கனி) நேற்று (02.02.2002) சனிக்கிழமை மலேசியாவில் காலமானார்.

அன்னார் சித்தன்கேணியைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி நடராசா தம்பதிகளின் மகனும் சுசிலாவின் (ஆஸ்திரேலியா) அன்புக் கணவரும் ஆனந்நிலா (ஆஸ்திரேலியா), நிரோசன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற நல்லைநாதன் பேரின்பநாயகி, ஆனந்தராசா (இளைப்பாறிய தபால் அதிபர்), நாகேஸ்வரி, சற்குணதேவி, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், வைத்திய கலாநிதி பரராஜசிங்கம் தம்பதிகளின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஆஸ்திரேலியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.ஆனந்தராசா
(வேலி)

*டச்சு றோட்,*
*சித்தன்கேணி.*
(C/20594)

# மீனவர் விவகாரத்தில் பிரதமர் நேரடியாகத் தலையிடவேண்டும்

## மாவை, சிவாஜிலிங்கம் கூட்டாக கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.3

மறியற்போராட்டத்தில் குதித்துள்ள யாழ்மீனவர்களின் கோரிக்கைகளுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேரடியாகத் தலையிட்டு பதில தர வேண்டும்.

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் கூட்டாக பிரதமரிடம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

மீனவர்களின் போராட்டம் குறித்து எம்.பிக்கள் இருவரும் நேற்றுக் காலை பிரதமருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உரையாடினர்.

கடந்த இருபது வருடங்களாக பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்துவந்த வடபகுதி மீனவர்கள் புதிய அரசு பதவியேற்றதும், தமக்கு ஒரு விடிவு காலம் கிட்டும் என எதிர்பார்த்தனர். ஆனால் அரசு அவர்களுக்கு சாதகமான பதிலை அளிக்கவில்லை.

அண்மையில் யாழ்.விஜயம் செய்த புனர்வாழ்வு, அகதிகள் மீள குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவிடம் மீனவர்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து விரிவாக எடுத்துக் கூறினர். ஆனால் அமைச்சரும் இந்த விவகாரம் குறித்து பதில் தருவதாகவில்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். எனவே பிரதமர் என்ற வகையில் இந்த விவகாரத்தில் தாங்களே நேரடியாகத் தலையிட்டுத் தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் - என்று எம்.பிக்கள் பிரதமரிடம் கேட்டுக்கொண்டனர்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க -

யாழ்.மாவட்ட மீனவர்களின் பிரச்சினை குறித்து ஆராய்வதற்கென குழுவொன்றை யாழ்ப்பாணம் அனுப்பி வைப்பதாகவும் -

இதுகுறித்து யாழ்.மீனவர் சங்க உறுப்பினர்களுடன் தாமே நேரடியாகத் தொடர்புகொள்வதாகவும் - தெரிவித்தார்.

இதற்கிடையில் -

யாழ்.மீனவர்களின் விவகாரம் குறித்து அரசின் உயர் அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு உரிய தீர்வை பெற்றுத் தருமாறு மாவை சேனாதிராசா தமிழர் கூட்டமைப்பின் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், எம்.சிவசிதம்பரம் ஆகியோரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

*(மற்றொரு செய்தி 5ஆம் பக்கத்தில்)* (ஐ-7)

# நான்காவது நாளாக நேற்றும் மறியற்போர்!

யாழ். செயலகம் முன்பாக கடற்றொழிலாளர் சமூகம் நடத்திவரும் மறியற்போராட்டம் நேற்று நான்காவது நாளாகவும் தொடர்ந்து நடைபெற்றது.

நேற்றைய போராட்டத்தில் நூற்றுக்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர். இடையிடையே மழைபெய்த போதிலும் போராட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

இன்று போராட்டம் நடைபெறமாட்டாது என்றும் நாளை திங்கட்கிழமை தொடர்ந்து போராட்டம் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் -

யாழ்.மாவட்ட எம்.பிக்களான மாவை சேனாதிராசா, எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் நேற்று மறியற்போராட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

மேற்படி போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து அரசியல் கட்சிகள், பொது அமைப்புகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன. (ஐ-7-8-10-180)

# மாகாணக் கல்விப் பணிப்பாளராக எம்.எம். இசக்தீன் தெரிவாக வாய்ப்பு

திருகோணமலை,பெப்.3

வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய இ.சிவானந்தன் நேற்றுடன் ஓய்வுபெற்றதையடுத்து அவரது இடத்திற்கு கல்முனை மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.எம். இசக்தீன் நியமனம் செய்யப்படலாம் எனத் தெரியவருகிறது.

புதிய மாகாணக் கல்விப்பணிப்பாளர் ஒருவரை நியமனம் செய்வது தொடர்பான நேர்முகப் பரீட்சை நேற்று திருகோணமலையில் உள்ள கல்விச் சேவைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்தவர்களான தற்போது பிரதி மாகாணக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிவரும் எஸ்.மகாலிங்கம், வவுனியா மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கே.விசாகலிங்கம் மற்றும் எம்.எம். இசக்தீன் ஆகியோர் இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றினர்.

இவர்களில் சேவை மூப்பு அடிப்படையில் எம்.எம்.இசக்தீன் மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கு நியமனம் செய்யப்பட வாய்ப்புள்ளதாகத் தெரியவருகிறது. (ஐ-7)

# கிளிநொச்சி ஆஸ்பத்திரியை புனரமைக்க ரூ.15 கோடி தேவை!

வவுனியா,பெப்.3

ஸ்ரீலங்கா இராணுவத்தின் 'சத்ஜய' படை நடவடிக்கைகளால் அழிவுற்ற கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையை மீளக்கட்டியமைக்க 15கோடி ரூபா தேவையென மாவட்ட வைத்திய அதிகாரி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

1996 இல் கிளிநொச்சி நகரை சிறிலங்காப் படையினர் 'சத்ஜய' நடவடிக்கை மூலம் கைப்பற்றியபோது அங்கு இயங்கிய மாவட்ட மருத்துவமனை அழிவுற்றது.

எஞ்சிய சாதனங்களுடன் அக்கராயன் கிராமிய மருத்துவமனையில் இது தற்போது இயங்கி வருகின்றது. மாவட்ட மருத்துவமனைக்கு ஏற்பட்ட அழிவுகள், அதனை மீளக்கட்டமைக்க தேவையான நிதி பற்றிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்படி கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையை மீளக் கட்டியெழுப்ப 15கோடி ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை -

கடந்த 2001 டிசெம்பரில் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் வெளிநோயாளர் பிரிவில் 19,534 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர். கிளிநொச்சி நகரில் கட்டடம் ஒன்றில் இயங்கும் சிகிச்சை நிலையத்தில் 5,614 நோயாளர்களும், அக்கராயனில் இயங்கும் மாவட்ட மருத்துவமனையில் 13,920 நோயாளரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

வயிற்றோட்ட பாதிப்பால் 92 பேரும், காய்ச்சலால் 1910 பேரும், மலேரியா பாதிப்பால் 590 பேரும், விசர் நாய்க்கடியால் 42 பேரும், குருதிச் சோகையால் 11 பேரும் பாதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற்றுள்ளனர்.

டிசெம்பர் மாதத்தில் இடம்பெற்ற 140 பிறப்புகளில் 19 நிறைகுறைந்த பிறப்புகளாகும். ஒன்று இறந்த பிறப்பாகும். விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற்ற 806 பேரில் 17 பேர் குருதிச் சோகையால் பாதிக்கப்பட்டவர்கள். 24 பேர் பாம்புக்கடிக்கு இலக்காகி சிகிச்சை பெற்றுள்ளனர். (ஐ)

### வறிய குடும்பங்களுக்கு உதவி

வவுனியா,பெப்.3

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள முல்லை அகதிகள் புனர்வாழ்வுக் கழகச் செயற்பாட்டு கிராமங்களில் உள்ள 130 வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு உணவு அல்லாத பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம், போரூட் ஆகிய நிறுவனங்கள் இதற்கு உதவி அளித்துள்ளன. (ஐ)

### சுதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டத்தில் குதிப்பதுடன், செயலகத்தில் சுதந்திரதினத்தை முன்னிட்டு தேசியக் கொடியை ஏற்றவிடாது தடுக்கப்போவதாகவும் அறிவித்துள்ளனர். கடந்த புதன்கிழமை மறியற்போராட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சந்தித்துப் பேசிய யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், மீனவர்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்கப்பெறாவிட்டால் செயலகத்தில் தேசியக் கொடியை ஏற்றவிடாது தடுக்கப்போவதாகக் கூறியிருந்தமை தெரிந்ததே.

இதற்கிடையில் நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள மறியற்போராட்டத்துக்கு பொது அமைப்புகள் பூரண ஆதரவு வழங்கவேண்டும் என கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் எஸ்.தவரட்ணம் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ-7-8-10-180)

### நீர்கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கைதிகள் வெளிநாடு செல்வதற்காக முகவர்களுக்குப் பணம் கொடுத்து கடல் மூலமும், விமானம் மூலமும் பயணம் செய்ய முற்பட்டபோது கைது செய்யப்பட்டவர்களாவர். இவர்களை விடுதலை செய்வதற்கு குடிவரவு, குடியகல்வு அதிகாரிகள் அனுமதி மறுத்து வருகின்றனர். வழக்கு தொடுக்கப்பட்ட போதும் தேசிய குற்றச்சாட்டு என்பதினால் இவர்களைப் பிணையிலும் விடுதலை செய்யமுடியாது என சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. அதற்கான சட்டவரையறைகள் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்றும் திணைக்களம் மேலும் கூறியுள்ளது. தம்மை விடுதலை செய்யுமாறு கோரி கடந்த இரு மாதத்திற்கு முன்னர் இந்த கைதிகள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர். இக்கைதிகளில் அனேகமானோர் தமிழ் இளைஞர்களாவர். இதேவேளை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு களுத்துறை, பூஸா, அனுராதபுரம், வெலிக்கடை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தம்மை விடுதலை செய்யுமாறு கோரி இன்று இரண்டாவது நாளாகவும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர். இவர்களைப் பிணையில் விடுதலை செய்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும் செவ்வாய்க்கிழமை சட்டமா அதிபர் திணைக்களத்தில் கூட்டம் ஒன்று இடம்பெறவுள்ளதாகவும் சட்டத்தரணியும் எம்.பியுமான விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார். (ஐ-6-9-173)


கீர் கல்வி நிலையம்

பலாலி றோட் - திருநெல்வேலி.

இணைந்த கணிதம்

P.MAHESWARAN (B.Sc.)

மீட்டல் 2002

Mon., Wed., Fri. 5-6 p.m.

புதிய பிரிவு - 2003/2004

ஆரம்பம்: 05.02.2002 (250)


# சமாதானத்துக்கு இது கடைசிச் சந்தர்ப்பம்

## அம்பாறை எம்.பி. சந்திரநேரு உரை

அம்பாறை,பெப்.3

சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான இறுதித்தருணம் இது. இந்த வாய்ப்பைத் தக்கமுறையில் பயன்படுத்தாவிடில் சமாதானம் என்றைக்குமே எட்டாக் கனியாகிவிடும்

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பின் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநாயகம் சந்திரநேரு.

பாண்டிருப்பில் நேற்று நடைபெற்ற பொதுவரவேற்பு நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

விடுதலைப் புலிகளை சிறந்தவர்கள் என முழு உலகமும் ஏற்றுக் கொண்டுள்ளது. அதேவேளை தமிழர்களும் தமது ஏக பிரதிநிதிகளாகப் புலிகளை ஏற்றுள்ளனர்.

நோர்வே அரசு சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதில் தீவிர ஆர்வம் காட்டிவருகின்றது. ஆனால் ஜே.வி.பியினர் சமாதான முயற்சிகளைக் குழப்புவதையே நோககமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.

சிங்கள இளைஞர்களை சுட்டும் வெட்டியும் கொலைசெய்த பின்னர் அவர்களின் பிரேதங்களை ஆற்றில் மிதக்கவிட்ட ஜே.வி.பியினர் இன்று அவ்வாறான சூழ்நிலையை மீண்டும் உருவாக்கவே முயற்சி செய்கின்றனர்.

எனவே சமாதானத்தில் ஆர்வம் உடைய அனைவரும் சமாதானத்துக்கான இறுதித்தருணம் இதுவே என்பதை உணர்ந்து அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் - என்று அவர் தனதுரையில் தெரிவித்தார். (ஐ-7-14)

## காவல்துறை உறுப்பினர் சாவு!

வவுனியா,பெப்.3

தமிழீழ காவல்துறை உறுப்பினர் ஒருவர் தவறுதலாக கிணற்றுக்குள் வீழ்ந்து உயிரிழந்தார் என்று விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

வவுனியா கொந்தாறுகுளம் என்னும் இடத்தில் இச் சம்பவம் கடந்த வியாழனன்று இடம்பெற்றது. யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இராமசாமி அம்பிகைபாலன் என்பவரே உயிரிழந்தார்.

இவர் தமிழீழ காவல் துறையின் சிறப்புப் படைப்பிரிவின் உறுப்பினராவார். (ஐ)

### மட்டக்களப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்தாறுமூலையில் இருந்து ஆரம்பிக்கும் பேரணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.தங்கவடிவேலும், வாழைச்சேனைப் பேரணிக்கு ஜோசப் பரராஜசிங்கமும், களுவாஞ்சிக்குடியில் இருந்து ஆரம்பிக்கும் பேரணிக்கு வெள்ளிமலை எம்.பியும் தலைமை வகிப்பர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறும் சமாதானப் பேரணிகளின் முடிவில் காந்தி சதுக்கத்தில் பொதுக்கூட்டமும் நடத்தப்படும். (ஐ-7-6-14)

### ஜெயலலிதாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமரர் எம்.ஜி.இராமச்சந்திரனின் விருப்பமாக இருந்துள்ளது. இன்று அவரது கட்சியைக் கையில் வைத்திருக்கும் தாங்கள் ஈழத்தமிழர் விவகாரங்களில் எம்.ஜி.ஆர். கொண்டிருந்த ஈடுபாட்டைக் கவனத்தில் கொண்டு இலங்கையில் சமாதானம் உருவாக உதவவேண்டும் என்று இராமலிங்கம் சண்முகசுந்தரம் என்ற ஈழத் தமிழர் தனது பகிரங்கக் கடிதத்தில் ஜெயலலிதாவைக் கேட்டிருக்கிறார். (ஐ)

### போர் நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகளும் எழுத்துமூலம் கேட்டிருப்பதாகப் பேச்சாளர் அர்ஜுன ரணவன தெரிவித்தார்.

வன்னிக்கான ஓமந்தை, உயிலங்குளம் பாதைகளைத் திறப்பதற்கான பேச்சுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. திறக்கப்படும் பட்சத்தில் அனுசரணை வழங்கத் தயாராக இருப்பதாகவும் அர்ஜுன தெரிவித்தார்.

ஓமந்தைப் பகுதியில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றுமாறு விடுதலைப் புலிகளிடம் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கேட்டிருப்பதாக சில ஊடகங்களில் வெளிவந்த செய்தி தவறானதாகும். அவ்வாறு கேட்கும் அதிகாரம் அதற்கு இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தச் செய்தியாளர் மாநாட்டில் செஞ்சிலுவைச் சர்தேசக் குழுவின் தலைமை வதிவிடப் பிரதிநிதி ஆர்மின் குறூபரும் கலந்துகொண்டார்.

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுக்காக மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் உற்சாகம் ஊட்டுவதாக இருக்கின்றன. இம்முறை சமாதானப் பேச்சுகளின் மூலம் நல்லபலன் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். சமாதான முயற்சிகளுக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தனது ஆணை வரம்புகளுக்கு உட்பட்ட ரீதியில் உதவிகளை செய்யும் என்று அவர் தெரிவித்தார். (ஐ-6-7-9)


GAYATHRI ENGLISH INSTITUTE

*ACTIVE ENGLISH CLASSES:* By Experienced and Efficient Teacher.

- Classes commencing 10th February 2002.
- English Classes specially for Commerce and Management students.
- English teacher available for G.C.E. (O/L) and (A/L) students also.
- Number of students in one class 20 only.
- For further Particulars please contact.

*K.PARAMESWARAN,*
*10, SADDANATHAR ROAD,*
*NALLUR NORTH.*

(119)


## மரண அறிவித்தல்

**நாகேஸ்வரஐயர் சண்முகராஜ ஐயர்**

**(துரை ஐயா)**

*(நுணாவில் மத்தி அருள்மிகு கந்தசுவாமி (வைரவர்) தேவஸ்தான பூசகர்)*

நுணாவில் மத்தி, சாவகச்சேரியைச் சேர்ந்த நாகேஸ்வரஐயர் சண்முகராஜஐயர் (துரை ஐயா) அவர்கள் நேற்று (02.02.2002) சனிக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் ஆவரங்காலில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்காலிக முகவரி:
*வே. தியாகராஜ சர்மா,*
*10ஆம் கட்டை,*
*ஆவரங்கால், புத்தூர்.*

தகவல்.
ச.லோகேஸ்வரசர்மா (ரவி)
(மகன்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.02.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.